www.padippakam.com

## தேர்தல் முடிவுகள் ஊழலுக்கு விடுதலையா?

ஜூன்-2001

# மக்கள் களம்



ஏங்கல்ஸ்

மாண்பைக் காக்கும் மாத இதழ்



## ஊழல் = மதவாதம்

ரூ4.50

படிப்பகம்

www.padippakam.com

# தேர்தல் கூத்து

—பாதை மரியஜோ

தேர்தல் கூத்தில்
மன்னர்களாக நமக்கு அரிதாரம்பூசி
சிம்மாசனத்தில் நம்மை அமர்த்தி
மக்கள் தீர்ப்பே மகேசன் தீர்ப்பென்று
வேடிக்கைப் பார்த்த அரசியல்வாதிகள்
தேர்தல் முடிந்தகையோடு
மங்களம்பாடி
மாயமாய் மறைந்துவிடுவர்!

ஐந்து ஆண்டுகட்கொருமுறை
ஆகா, ஓஹோ வென்று
சத்திமான்களாக நம்மை
ஆகாயத்திற்கு உயர்த்துகின்றனர்
அனுபவிக்கும்போதுதான் புலப்படுகின்றது
அவர்கள் நம்மை உயர்த்தியது
உல்லாச வாழ்விற்கு இட்டுச்செல்ல அன்று
மாறாக
சிலுவையில் அறைவதற்காகவே என்று!

தேர்தலுக்குமுன்
நம்கால்களில் விழுந்தவர்களும்
நமக்கு கூழைக்கும்பிடு போட்டவர்களும்
இனி
காணாமல் போனவர்கள் பட்டியலில் கலந்திடுவார்கள்
விழாக்களில் மட்டும்
வீடியோ கேமராக்களுக்கு தலையைக் காட்டுவார்கள்!

சாதி வித்தியாசம் பார்க்காமல்
சமய அடையாளம் கேட்காமல்
பட்டிதொட்டிகள் யென்றாலும்
தேடிவந்து ஒட்டி உறவாடியவர்களை
இனி
கஜினி முகமதுகளாக நாம்தான் தேடி
படையெடுக்கவேண்டும்

வாக்குறுதிகளை அள்ளிவீசிய அரசியல்வாதிகள்
இனி
பணத்தை மட்டுமே
அள்ளுகின்ற வழிகளில் ஆர்வம்காட்டுவார்கள்
சாதிய ரீதியாக சவ்வாயித்துக்கொண்டு
நீதிமான்கள்போல சமத்துவ சமுதாயத்திற்காக
மேடைகளில் முழங்குவார்கள்!

தொடர்ச்சி கடைசி உள்பக்க அட்டை....



படிப்பகம்

www.padippakam.com


# இனி ஒரு யுகம் படைப்போம் !

திட்டம் : 102
செயல் : 6

நிறுவன - ஆசிரியர்
எல். யேசுமரியான்

ஆசிரியர் குழு
சிந்தை ராஜன்
பட்டி தமிழ் விரும்பி
களப்பிரியா

உரிமை மற்றும்
வெளியிடுபவர்
ஜி. கோபிநாதன்
67, கெனால் தெரு,
சி.பி. ரோடு,
சென்னை-600 021.

அச்சிட்டோர்
நவஜோதி அச்சகம்
சென்னை-600 002

படைப்புகள்,சந்தா
மற்றும் தொடர்புகளுக்கு

எம்.ஜெ.நாயகம்
நிர்வாகி
57/1,திருக்கழுகுன்றம் ரோடு,
வல்லம் அஞ்சல்,
செங்கல்பட்டு-603 002.


# களம் காணும் நெஞ்சங்களே!

அக்கினி நட்சத்திர அகோர வெப்ப அலைகள் மத்தியில் தமிழகப் பேரவைத் தேர்தல் நடந்துமுடிந்துள்ளது. அ.தி.மு.க ஆட்சி பீடத்தில் அமர்ந்துள்ளது.

ஊழல் தொடர்பாகக் கைது செய்து 29 நாட்கள் சென்னை மத்தியச் சிறையில் அடைக்கப்பட்டு மற்றும் ஊழல் வழக்குகள் சிலவற்றில் அதிகபட்சம் 3 ஆண்டுகள் சிறை தண்டனைப் பெற்ற ஜெயலலிதா அவர்கள் தலைமையிலான கூட்டணிக்கு வெற்றி கிடைத்துள்ளது. இவ்வெற்றியை வைத்து முன்னாள் பாரதிய ஜனதா கட்சி தலைவர் பங்காரு லட்சுமணன் போன்றவர்கள் “மக்கள் ஊழலைப் பெரிதுபடுத்தவில்லை” என்று கூறி வருகின்றனர். இவ்வெற்றி ஊழலுக்குக் கிடைத்த மரியாதையா?

தமிழகத்தில் மொத்தம் 4,74,00,000 வாக்காளர்கள் உள்ளனர். இவர்களில் 1,40,00,000 வாக்களர்கள் மட்டுமே அ.தி.மு.க அணிக்கு வாக்களித்துள்ளனர். அதாவது 29 விழுக்காடு வாக்காளர்கள் மட்டுமே அ.தி.மு.க அணியை வெளிப்படையாக ஆதரித்துள்ளனர். மீதமுள்ள 71 விழுக்காடு பெரும்பான்மை வாக்காளர்கள் எதிராக உள்ளனர். அவ்வாறே 23 விழுக்காடு வாக்காளர்கள் மட்டுமே தி.மு.க அணிக்கு ஆதரவாக வாக்களித்துள்ளனர். மீதமுள்ள 77 விழுக்காடு பெரும்பான்மை வாக்காளர்கள் எதிராக உள்ளனர். கூட்டணியின்றி தி.மு.க வோ. அ.தி.மு.க வோ தனித்துப் போட்டியிட்டிருந்தால் தற்போது இவர்களுக்குக் கிடைத்துள்ள ஆதரவு இன்னும் மோசமாகியிருக்கும்! ஆக பெரும்பான்மை மக்கள் ஊழலையும் மதவாதத்தையும் எதிர்த்துள்ளனர்.

“வாக்களிப்பது நமது கடமை” என்று பலவித பிரச்சாரங்கள், விளம்பரங்கள் செய்தும் 42 சதவீத வாக்காளர்கள் தேர்தலைப் புறக்கணித்து எதிர்த்துள்ளனர். இத்தகைய தேர்தல்களிலும் தற்போதுள்ள போலி– ஜாதிய ஜனநாயக அமைப்புகளிலும் இவர்களுக்கு நம்பிக்கையில்லை என்பதை இப்புறக்கணிப்பு வெளிச்சம் போடுகிறது.

தேர்தல் நாளன்று ஒருஓட்டுக்கு “இவ்வளவு”, ஒரு வீட்டிற்கு “அவ்வளவு” என்று ஓட்டுகட்சிகள் பணத்தைப் பட்டுவாடா செய்யாதிருந்தால் ஓட்டுப்போடாதவர்களின் எண்ணிக்கை கூடியிருக்கும். “இதுவும் தீமை அதுவும் தீமை. 'எனவே குறைந்த தீமை (Lesser evil) யுடையதை தேர்ந்தெடுபோம்”–ஜூனியர் அயோக்கியர்களை ஆதரித்துவிட்டுப்போவோம் என்ற பாணியில் ஓட்டுப்போட்டவர்களும் உண்டு. அயோக்கியதனமே வேண்டாம் என்ற ஓர் நிலைப்பாடு எடுத்திருந்தால் ஓட்டுப்போடாதவர்களின் எண்ணிக்கை மேலும் அதிகரித்திருக்கும்.

ஏறக்குறைய பாதிப்பேர் தேர்தலைப்புறக்கணித்த நிலையில் நடத்தப்படும் தேர்தல் ஜனநாயகத் தேர்தலாகுமா? மக்களின் விழிப்புணர்வு அதிகரிக்க தேர்தலைப் புறக்கணிக்கின்றவர்களின் எண்ணிக்கையும் அதிகரிக்கும்.

கட்சிகள் தேசியக் கட்சிகளாக மாற வரைமுறைகள் உண்டு. வேட்பாளர்கள் குறிப்பிட்ட வாக்குகளைப் பெறவில்லையென்றால் டெபாசிட் இழக்கின்றனர். 24 உறுப்பினர்களுக்குமேல் உள்ள கட்சிகள் மட்டுமே சட்டமன்ற கட்சிகளாக அங்கீகரிக்கப்படும். இப்படி பல தேர்தல் வரைமுறைகளை வகுத்து செயல்படுகையில் ஓட்டுமொத்த தேர்தலுக்கென்று ஒரு வரைமுறை இருக்கவேண்டாமா?

குறைந்தது 80 விழுக்காடு வாக்குகள் பதிவான தேர்தலே ஜனநாயகத் தேர்தலாகவும் அத்தகைய தேர்தலில் தேர்ந்தெடுக்கப்பட்டவர்களே பெரும்பான்மை மக்களின் பிரதிநிதிகளாவும் அங்கீகரிக்கவேண்டும். இவ்வரைமுறை புதிய ஜனநாயகத்திற்கு ஒரு வழியாகவும் அமையும்.

எனவே களத்தில் உள்ளவர்கள் புதிய ஜனநாயகத்திற்கான முயற்சிகளில் ஈடுபட வேண்டும். “சீனாவை மாற்ற வேண்டுமென்றால் கிராம விவசாயிகளிடம் செல்லுங்கள். அவர்களிடம் உள்ள ஞானத்தைச் சேகரித்து வாருங்கள்” என்றார் சீனப்புரட்சியாளர் மாவோ. புதிய ஜனநாயகத்திற்கான கரு சேரிகளில் உள்ளதை கண்டுபிடித்தாயா?

*என்றும் களம் நிற்கும்*

*எல்- யேசுமரியான்.*



படிப்பகம்

www.padippakam.com

# போலிஸ் முன்னாடி நிக்கமாட்டானுங்க

## இறுமாப்பு பேசும் டி.எஸ்.பி







புதுவைக்குள் ஆரோவில்! இந்த இடத்தின் தனிச்சிறப்பே பல நாட்டினரும், பல மொழி பேசுபவர்களும், பல்வேறு மதங்கள், சாதிகளைச் சார்ந்தவர்களும் ஒன்றாகக் கூடி வாழ்வது இடம். ஊரு, சேரி என தனித்தனியே பிரிந்து கிடக்கின்ற இந்த நாட்டில் இப்படியொரு பகுதி இருப்பது அதிசயம்தானே?

சமத்துவத்தின் அடையாளமான இந்த ஆரோவில்லுக்கு அருகாமையில் உள்ளது இராயப்புதுப்பாக்கம். ஆரோவில்லுக்கு பக்கத்திலிருந்தாலும் ஆரோவில்லில் நிலவும் சமத்துவத்திற்கு நேர் எதிரான நிலை இந்த இராயப் புதுப்பாக்கம் கிராமத்தில் நிலவிக் கொண்டிருப்பதுதான் கசப்பான உண்மை.

சுமார் 2000 -க்கும் அதிகமான தலித் மக்கள் வாழும் இந்தக் கிராமத்தில் தலித்துகளில் இளைஞர்கள் முதல் பெண்கள் வரை அனைவரும் கல்வி, விளையாட்டு என பல்வேறு துறைகளில் முன்னேறியுள்ளனர். பெண்களும் தங்களுக்குள் சுய தொழில்களைச் செய்து வந்ததால் சாதி இந்துக்களின் பண்ணைகளில் வேலை செய்வதற்கு ஆள் இல்லாமல்போனது.

தலித் மக்களின் இந்த நிலமை சாதி இந்துக்களிடையே கத்திரிவெய்யில் புழுக்கத்தை கிளப்பியது. நம்மிடம் கூலி வேலை செய்து பிழைப்பு நடத்திக் கொண்டு வந்த பற நாய்களுக்கு பேண்ட், சர்ட் ஒரு கேடா! இவனுங்களை இப்படியே விட்டால் நமக்குதான் அவமானம் என சாதி இந்துக்கள் அங்கலாயித்தனர். இவனுங்களை உதைத்தால்தான் சரியான பாடம் புகட்ட முடியும், அதுலதான் நமக்கு நிம்மதி என நேரம் பார்த்து காத்துக்கொண்டிருந்தனர் சாதி இந்துக்கள்.

சுமார் 5 ஆண்டுகளாகக் காதல் வானில் சிறகடித்த தலித் இனத்தைச் சார்ந்த. பழனி என்பவரும் சாதி இந்துவான (நாவிதர்) சாரங்கபாணி மகள் விஜயலட்சுமியும் ஒரு நாள் திருமணம் செய்துக் கொண்டனர். பறையன் எப்படி மேல் சாதிப் பெண்ணைக் கல்யாணம் செஞ்சிக்கலாம், இப்படியே விட்டால் எங்க பொண்ணுங்கெல்லாம் என்னாவது என இந்தச் சம்பவத்தைக் காரணமாக வைத்துக்கொண்டு தலித் மக்களுக் கெதிராக களத்தில் இறங்கினர் சாதி இந்துக்கள். பறையன்களுக்கு ஒரு பாடம் புகட்டனும் என திட்டமிட்டு செயலில் இறங்க காத்திருந்தனர்.

12.04.2001 அன்று சாதி இந்துக்களின் திட்டத்தை அறியாத தலித் பெண்கள் சாதி இந்துக்கள் வாழும் பகுதிக்கு தண்ணீர் எடுக்கச் சென்றனர். சாதி இந்துக்களான புருஷோத்தமன், ஆறுமுகம், நாராயணன், ஜெயசங்கர், நாகராஜன், சேகர் ஆகியோர் கொண்ட கும்பல் தலித் பெண்களை வழிமறித்து உருட்டுக்கட்டைகளாலும், இரும்புப் பைப்புகளாலும் பலமாகத் தாக்கினர். "பறத் தேவடியாள்களுக்கெல்லாம் என்னடி தண்ணீர் வேண்டி கிடக்கு" என அருவருப்பான வார்த்தைகளால் அவர்களை அர்சித்து அவர்கள் கொண்டுவந்த பாத்திரங்களை உடைத்துப் போட்டனர். இந்நேரத்தில் அவ்வழியாக வந்த பலராமன்,சேகர் என்ற தலித்துகளையும் அடித்து உதைத்து வெறியாட்டம் ஆடினர் சாதி இந்துக்கள்.

சாதி இந்துக்களிடம் அடி, உதைப்பட்டு அவமானப்பட்டு, புடவை ஜாக்கெட்டுகள் கிழிந்த நிலையில் பெண்கள் அங்கிருந்து ஓடிவந்தனர். இதனைக்கண்ட பாலு, முத்துக் கிருஷ்ணன், வெங்கடேசன், பலராமன் மற்றும் தலித் பெரியோர்களும் சேர்ந்து சாதி இந்துக்களிடம் பஞ்சாயத்துக் கூட்டி விசாரிக்கச் சென்றனர்.

இந்நேரத்தில் புருஷோத்தமன் என்ற சாதி இந்து பற பசங்களுக்கு பஞ்சாயத்து ஒரு கேடா, இங்க நாங்க வைச்சது தான்டா சட்டம் என ஆவேசமாக இரும்பு பைப்பால் வெங்கடேசன் என்பவரைத் தாக்கி மண்டையை உடைத்தான். இவனைத் தொடர்ந்து திட்டமிட்டபடி சாதி இந்துக்கள் பலரும் மறைத்து வைத்திருந்த ஆயுதங்களாலும் உருட்டுக் கட்டைகளாலும் பஞ்சாயத்திற்குச் சென்றிருந்த பெண்கள்-ஆண்கள் என அத்தனை தலித்துக்களையும் வளையம் அமைத்து அடித்து உதைத்தனர். இதில் பாலு, சங்கர், பொன்னின்செல்வன், குமார் ஆகியோருக்குப் பலத்த காயம் ஏற்பட்டது.

இதிலும் வெறி அடங்காத சாதி வெறிக் கும்பல் நாராயணன் மற்றும் நாராயணசாமிபிள்ளை ஆகிய தலித்துகளின் வீடுகளை அடித்து நொறுக்கி சூறையாடியது. இதனால் பாதிக்கப்பட்ட தலித் மக்கள் காவல் நிலையத்திற்குச் சென்று புகார் கொடுத்தனர்.

பொது தொலைபேசி சாதி இந்துக்கள் பகுதியில் இருப்பதால் தலித் மக்கள் காவல் நிலையத்திற்குச் செல்வதற்கு முன்னரே சாதி இந்துக்கள் பொது தொலைபேசி மூலம் காவல் துறைக்கு தலித்துகள் தங்களைத் தாக்கிவிட்டதாகத் தெரிவித்தனர்.

சாதி இந்துக்களின் தாக்கு தலுக்கு உள்ளான பலராமன் நம்மிடம் "சார் சம்பவம் நடந்த உடனேயே நானும் என்னுடன் அடிபட்டவர்களும் கோட்டக் குப்பம் காவல் நிலையத்தில் புகார் செய்தோம். அன்று மாலையே ஊருக்குள் வந்த போலிஸ் நேராக சாதி இந்துகள் வாழும் பகுதிக்குள் சென்று சிறிது நேரம் கழித்து எங்கள் பகுதிக்குள் வந்தனர்.



படிப்பகம்

www.padippakam.com

சக்திவேல், ஜெகநாதன், அய்யனார்,சங்கர், கோவிந்தன், ஜெய்கணேஷ், பாலாஜி, மகேஷ்குமார், குருமூர்த்தி, பொன்னின்செல்வன், பார்த்தீபன், சேகர், அருள், சுப்பிரமணி, வேல்முருகன், ரவி, மணிமாறன், கருணாகரன், சேட்டு ஆகிய தலித்துக்களை விசாரணைக்காக அழைத்துச் சென்றனர். இவர்கள் அனைவரையும் சாதி இந்துக்கள் பகுதிக்குக் கொண்டுப்போனாங்க. அங்க போயி அதுக்கப்புறமா போலிஸ் ஸ்டேஷனுக்கு கொண்டு போனாங்க. அங்க போயி இவங்கதான் பண்ணக்கார வீட்ட அடிச்சதா பொய்கேசுப் போட்டு ஜெயிலுக்கு அனுப்பிட்டாங்க. ஆனா பாதிக்கப்பட்ட நாங்க கொடுத்த புகார் மனுவை போலிஸ்காரங்க கண்டுக்க வேயில்ல" என விரக்தியுடன் நம்மிடம் கூறினார்.

இதற்கிடையில் 15.04.2001 அன்று வட்டாட்சியர் தலைமையில் அமைதி கூட்டம் நடைபெற்றது. அந்த கூட்டத்திலும் தலித் மக்களுக்கெதிராக ஒருதலைபட்சமாக தீர்மானம் நிறைவேற்றி தலித் மக்கள்தான் குற்றவாளிகள் என ஜோடிக்கப்பட்டது.

சாதி இந்துக்களுக்கு தலைமை தாங்கும் புருஷோத்தமன் மீது தக்க நடவடிக்கை எடுக்கும்படி டி.எஸ்.பி தியாகராஜனிடம் தலித்துகள் புகார் செய்தனர். அதற்கு அவர் "வட மாநிலத்திலெல்லாம் பற பசங்க போலிஸ் முன்னாடி நிக்க கூட மாட்டானுங்க, உடம்புல சட்டைக்கூட போடமாட்டானுங்க, தமிழ்நாட்டுல மட்டும்தான் உட்கார்ந்து பேசரானுங்க" என டயலாக் அடித்து வந்தவர்களைத் துரத்தி அடித்தார்.

காவல் துறையினர் மற்றும் வருவாய்துறையினரின் சாதிப் போக்கை தங்களுக்குச் சாதகமாக்கிக்கொண்ட சாதி இந்துக்கள், அமைதி கூட்டம் நடந்த மறு இரவே சுப்பிரமணி, பரசுராமன், அம்பிகா, கண்ணம்மாள், மணிமாறன் ஆகிய தலித்துக்களை வழி மறித்து தாக்கினர். இதில் மணிமாறன் என்பவர் முகத்தில் பலத்த அடிப்பட்டு ஆபத்தான நிலையில் திண்டிவனம் அரசு மருத்துவ மனையில் சேர்க்கப்பட்டார்.

புருஷோத்தமன் தலைமையில் நாகராஜன்,ரவி,இன்னொரு நாகராஜன், ராமலிங்கம், குப்பன், குமார், நாராயணசாமி, கார்த்திகேயன், மற்றும் ஆறுமுகம் ஆகியோர் கொண்ட சாதி இந்துக்கள் கும்பல்தான் தலித்துக்களை ஒழித்துக்கட்ட முன்னனியில் நிற்கின்றது. இதில் புருஷோத்தமன் "நாங்கள் போலிசுக்கு ரூபாய் 50,000 கொடுத்துள்ளோம் எங்களை எவனும் ஒன்னும் பண்ண முடியாது" என மார்த்தட்டி பேசி வருகின்றார். அதற்கேற்றாற்போல் காவல்துறையும் தலித் மக்களையே குறிவைத்து கைது செய்து கொண்டு வருகிறது. சாதி இந்துக்களுக்கு உறுதுணையாக பஞ்சாயத்து தலைவர் இராமலிங்கப் பிள்ளையும் செயல்பட்டுக்கொண்டு வருகின்றார் என பலரும் நம்மிடம் தெரிவித்தனர்.

வாசுகி, தனலட்சுமி ஆகிய தலித் பெண்கள் "இதுவரைக்கும் எங்க ஊர்ல இதுபோல சண்டையெல்லாம் வந்தது கிடையாது சாமி, எப்பவாவது சின்ன சின்ன பிரச்சனை வரும். ஆனா இந்த முறைதான் ஏதோ திட்டத்தோடு எங்கள இந்த அளவிற்கு அடிச்சி சித்தரவதை பண்ராங்க. அது இல்லாம பொய் கேசு போட்டு எங்க புள்ளைங்களை ஜெயிலுக்கு கூட்டினு போராங்க. பாவம் ஒரு பக்கம் பழி ஒரு பக்கம் இருக்குது சாமி" என கண்ணீரோடு தெரிவித்தனர்.

"வானூர் ஒன்றியத்திலேயே இந்த ஊரில்தான் தலித்துகள் படிப்பிலேயும், விளையாட்டிலேயும் முன்னால இருப்போம். இதுக்காக ஆரோவில் எங்களுக்கு நிறைய உதவி செய்யராங்க. நாங்களெல்லாம் நல்லா படிச்சி அரசு பதவிகளிலும், சொந்த கால்ல நிக்கிற அளவு முன்னேறனதால சாதிக்காரங்களுக்கு பிடிக்கல. பொறாமை ஏற்படுத்திச்சி. இதற்காக எங்கள எப்படியாவது ஒழித்துக்கட்டனும்னு திட்டம் போட்டு பல வகையில எங்களுக்குத் தொல்லைக் கொடுத்தாங்க. பொது தொலைபேசியை நாங்க பயன்படுத்த அனுமதிக்க மாட்டாங்க. பஞ்சாயத்துக் கிளார்க்காக இருக்கும் கார்த்திகேயன் அரசு உதவி எதுவாக இருந்தாலும் எங்க பகுதிக்கு தராம அவங்க பகுதிக்கே எடுத்துக்குனு போறதுக்கு எல்லா முயற்சியும் செய்யறார். குறிப்பாக, எப்போதும் விளையாட்டில் முதலிடமாகவும், வெளிமாநிலங்களுக்குச் சென்று விளையாடும் வீரர்கள் எங்க பகுதியில் இருந்தாலும் அரசாங்கம் கொடுக்கிற எந்த விளையாட்டுப்பொருட்களையும் எங்களுக்கு கிடைக்காதபடி செய்து விளையாட்டைப்பற்றி ஒன்றும் அறியாத சாதி இந்துக்கள் மட்டும் இந்த விளையாட்டுப் பொருட்களை அனுபவித்துக் கொண்டிருக்கின்றனர்.

எங்களுக்கு அடிப்படையிலேயே பல உரிமைகள் மறுக்கப்படுகின்றன. விரைவிலேயே நாங்க எங்க உரிமைகளை எடுத்துக்கொள்வோம். இதற்கு எவ்வளவு இடர்பாடுகள் வந்தாலும், அதை தூள்,தூளாக்குவோம். அதற்கு பிறகு காவல்துறையும் அரசு அதிகாரிகளும் நாங்க எப்படிப்பட்டவங்க என்பதை புரிந்து கொள்வாங்க" என ஆவேசமுற்றார் அம்பேத்கர் மன்றத்தைச் சார்ந்த குமார் என்பவர்.

- சிந்தை ஆர்






படிப்பகம்

www.padippakam.com

# புதுச்சேரியில் அரசியல் விபச்சாரம்

திருவிழா முடிந்தவுடன் வரி கொடுத்த மக்கள் விழாக்குழுவினரிடம் வரவு செலவுக் கேட்பார்கள். தேர்தல் முடிந்துவிட்டது தோற்றுப்போனவர்கள் கணக்கைச் சரி செய்கிறார்கள். வெற்றிப்பெற்றவர்கள் வரவை எதிர் நோக்குகிறார்கள். வாக்களித்த மக்களோ வெறும் பார்வையாளர்களாகத் தெருவில் நிற்கின்றார்கள். ஒவ்வொரு தேர்தலிலும் நாம் புதிய படிப்பனைகளைக் கற்றுக்கொள்கின்றோம். புதுச்சேரியில் நடைபெற்றது தேர்தல் அல்ல அரசியல் விபச்சாரம். வாக்களிப்பது சனநாயகக் கடமை என்று தேர்தல் ஆணையம் மக்களுக்கு அறிவுரை வழங்கியது. வாக்காளர்களுக்குப் பணமும் பாட்டிலும் தருவதற்கு ஓட்டுக்கட்சிகள் பயப்படவில்லை. விற்கப்பட்ட வாக்குகள் இங்கு மிக மிகக் குறைவு. விலைப் போனவை ரூ.50/முதல் 250/ வரை தாராளம். வேலையற்ற இளைஞர்களுக்கு மூன்று வேலை உணவுடன் 15 நாள் ஊதியம், பிரியாணியும் சாராயமும் அளவில்லாமல் கிடைத்தன.

வெளிநாட்டவர்கள் தாக்குதலை எதிர்க்க உள்நாட்டு மக்கள் இரவு நேரங்களில் விழித்திருப்பதைப் போல 09.05.2001 இரவு ஓட்டுக் கட்சியினர் இரவு முழுக்க திருடர்களைப்போல் அலைந்தார்கள். ஆம், அன்றைய இரவில் சட்ட மன்ற தேர்தல் ஜனநாயக கவர் கொடுப்பதில் சாதனைப் படைத்தது. வேட்பாளர்கள் தங்கள் நிழற்படம் பதித்த துண்டறிக்கைகளில் . பவ்வியமாக வணங்கி காட்சியளித்தார்கள். ஒரு முறை சட்ட மன்ற உறுப்பினராக வாய்ப்புக் கேட்டார்கள். பகுதி புரோக்கர்களை சாட்சியாக வைத்து வாக்குறுதிகளை வழங்கினார்கள். தெருக்களில் காக்கிச் சட்டையினரை நடக்க விட்டு பொதுமக்களை அரசு மிரட்டியது. தினசரிகள் கருத்துக் கணிப்பு நடத்தி மக்களை குழப்பின. அதேசமயம் வேட்பாளரின் தனிமனித ஒழுக்கம் , அரசியல் நேர்மை, அறிவு நாணயம் குறித்து முதலாளித்துவ அறிவு ஜீவிகள் வாய் திறக்கவில்லை.

இந்தியாவில் கட்சி மாறும் பண்பாட்டை தொடங்கி வைத்த பெருமை புதுச்சேரியை சாரும். அந்த நற்பணியைத் தொடங்கி வைத்தவர் தற்போதைய முதல்வர் ப. சண்முகம். இங்கே கொள்கை, லட்சியம், என்று எதுவும் கிடையாது. ஆதிக்க சாதியின் தனிநபர்களே அரசியலைத் தீர்மானிக்கின்றார்கள். தேர்தலில் போட்டியிட சீட்டு கிடைக்காவிட்டால் கொடியை, முழக்கத்தை, கரைபோட்ட வேட்டியை, தலைவரை மாற்றிக் கொள்வதில் இங்குள்ள அரசியல்வாதிகள் கூச்சப்படுவதில்லை. சமீபத்திய தேர்தலில் முந்தைய தேர்தல் அசிங்கங்களை மிஞ்சிவிட்டது.

பகுதி அடிப்படையில் புதுச்சேரியில் 21, காரைக்காலில் 6, மாகியில் 2, ஏனாமில் 1, ஆகிய 30 தொகுதிகளில் மொத்தம் 194 பேர் போட்டியிட்டனர். இவர்களில் 83 பேர் சுயேட்சைகள். பெண்கள் 7 பேர், தி.மு.க , அ.தி.மு.க, காங்கிரஸ் தலைமையிலான கூட்டணியும், ம.தி.மு.க இ.பொ.க (மா) தனித்தனியாகவும் போட்டியிட்டன. அ.தி.மு.க மட்டுமே இரண்டு இடங்களில் பெண் வேட்பாளர்களை நிறுத்தியது. ஒருவர் தலித், மற்றவர் வன்னியர்.





படிப்பகம்

www.padippakam.com

புதுவை சட்டமன்ற உறுப்பினர்கள் ( தலித் உறுப்பினர்கள் நீங்கலாக ) 2001

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1 | புதுச்சேரி | ராஜ்பவன் | தி.மு.க | எஸ்.பி. சிவக்குமார் | முதலியார் |
| 2 | ,, | உப்பளம் | அ.தி.மு.க | ஏ. அன்பழகன் | ,, |
| 3 | ,, | நெல்லித்தோப்பு | தி.முக | ஆர்.வி. ஜானகிராமன் | ,, |
| 4 | காரைக்ககால் | நிரவி | தி.முக | வி.எம்.சி சிவக்குமார் | ,, |
| 5 | புதுச்சேரி | மண்ணாடிப்பட்டு | அ.தி.முக | தெ, ராமச்சந்திரன் | ரெட்டியார் |
| 6 | ,, | ரெட்டியார்பாளையம் | பி.ஜே.பி | ஏ.எம்.கிருஷ்ணமூர்த்தி | ரெட்டியார் |
| 7 | ,, | நெட்டப்பாக்கம் | காங்கிரஸ் | வெ. வைத்தியலிங்கம் | ரெட்டியார் |
| 8 | ,, | குருவிநத்தம் | பு.ம.கா | இராதாக்கிருஷ்ணன் | ரெட்டியார் |
| 9 | ,, | முத்தியால்பேட் | அ.தி.மு.க | காசிலிங்கம் | கிராமணி |
| 10 | ,, | முதலியார்பேட் | தி.மு.க | சுப்பிரமணியன் | கிராமணி |
| 11 | ,, | அரியாங்குப்பம் | சுயேச்சை | தே, ஜெயமூர்த்தி | கிராமணி |
| 12 | காரைக்கால் | கோட்டுச்சேரி | காங்கிரஸ் | நளமகாராசன் | கிராமணி |
| 13 | மாகி | மாகி | காங்கிரஸ் | வல்சராஜ் | கிராமணி |
| 14 | மாகி | பள்ளூர் | காங்கிரஸ் | ஸ்ரீதரன் | கிராமணி |
| 15 | புதுச்சேரி | காபுக்கடை | பு.ம.கா | லட்சுமிநாராயணன் | யாதவர் |
| 16 | ,, | ஓர்லையன்பேட்டை | தி.மு.க | சிவா | யாதவர் |
| 17 | ,, | வில்லியனூர் | த.ம.கா | தெனிஜெயக்குமார் | யாதவர் |
| 18 | ,, | தட்டாஞ்சாவடி | காங்கிரஸ் | ரெங்கசாமி | வன்னியர் |
| 19 | காரைக்கால் | திருநள்ளார் | காங்கிரஸ் | கமலக்கண்ணன் | வன்னியர் |
| 20 | புதுச்சேரி | உழவர்கரை | த.மா.கா | நமச்சிவாயம் | வன்னியர் |
| 21 | காரைக்கால் | காரைக்கால்(தெ) | காங்கிரஸ் | ஏ.வி. சுப்பிரமணியம் | மீனவர் |
| 22 | ஏனாம் | ஏனாம் | சுயேச்சை | மல்லாடி கிருஷ்ணராவ் | மீனவர் |
| 23 | புதுச்சேரி | லாஸ்பேட் | காங்கிரஸ் | ஷாஜகான் | இஸ்லாமியர் |
| 24 | காரைக்கால் | காரைக்கால் | தி.மு.க | ஏ,எம்.எச் நாஜிம் | இஸ்லாமியர் |
| 25 | புதுச்சேரி | புஸ்சி | தி.மு.க | அனிபால்கென்னடி | கிறுஸ்தவர் முதலியார் |

இவைத்தவிர இ.பொ.க (மா.லெ), லோக் ஜன சக்தி ஆகியவை தலா ஓர் இடமும் இதர மூன்று பெண்கள் சுயேட்சைகளாகப் போட்டியிட்டனர். 7 பெண்களில் ஒருவர்கூட வெற்றிப் பெறவில்லை.

கட்சிசார்பாகப் போட்டியிட்டவர்களின் சாதி விவரங்கள், கட்சி, எந்தச் சாதியினருக்கு சேவை செய்கிறது என்பதை புரிந்து கொள்ள உதவும். காங்கிரசின் 21 வேட்பாளர்களில் 5 பேர் கிராமணிகள்(நாடார்). 6 பேர் முதலி, ரெட்டி, செட்டி சாதியினர். மொத்த வேட்பாளர்களில் இவை சரிபாதியாகும். இக்கூடுதல் எண்ணிக்கை கட்சித்தலைவர் நாராயணசாமி(கிராமணி), முதல்வர் சண்முகம் (முதலியார்) ஆகியோரின் செல்வாக்கை புலப்படுத்துகிறது. அபிசேகப்பாக்கம் பிரச்சனையில் தலித்துகளுக்கு ஆதரவாக இருந்த நிலையை அறுவடை செய்யும்பொருட்டு 3 தலித் தொகுதிகளில் வேட்பாளரை நிறுத்தி மூன்றையும் கைப்பற்றிக்கொண்டது.

தி.மு.கவின் 12 வேட்பாளர்களில் 6 பேர் முதலியார்கள். தி.மு.க முதலியார்களின் கட்சி என்கிற உண்மை மேலும் நிரூபணமாகியுள்ளது. கட்சித் தலைவர் ஜானகிராமன் முதலியார் கட்சியைத் தமது கட்டுப்பாட்டில் வைத்திருப்பது புரிகிறது. தமிழகத்தில் 22 தனித் தொகுதிகளில் போட்டியிட்ட தி.மு.க புதுச்சேரியில் ஒரு இடத்தில் மட்டுமே வாய்ப்பளித்தது. 20 இடங்களில் போட்டியிட்ட அ.தி.மு.க 8 இடங்களில் வன்னியரை நிறுத்தியது. தலித்துகளுக்கு 3 இடங்களை ஒதுக்கியது. பா.ம.க வின் 10 வேட்பாளர்களில் 6 பேர் வன்னியர்கள் த.மா.க போட்டியிட்ட 7 தொகுதிகளில் நாயுடு, கிராமணி, யாதவர், வன்னியர், முதலியார் சாதிகளுக்கு தலா ஒரு தொகுதியும் தலித்துகளுக்கு 2 தொகுதியும் ஒதுக்கின. புதுச்சேரி மக்கள் காங்கிரஸ் முதலியார், ரெட்டியார், தலித் ஆகியோருக்கு தலா இரு தொகுதியும் வன்னியர், நாயுடு, கிராமணி, சாதிக்கு தலா ஒரு தொகுதியும் ஒதுக்கியது.

தற்போதைய சட்ட மன்றத்தில் சாதிவாரியாக பிற்பட்ட சாதியினர் 14 பேர், முற்பட்ட வகுப்பினர் 8 பேர், தலித்துகள் 5 பேர், மதச்சிறுபான்மையினர் 3 பேர்களாக உள்ளனர் (பட்டியல் விவரம் பார்க்கவும்).

புதுச்சேரியில் பிற்பட்ட சாதிகளின் எண்ணிக்கை 64. இவை 51 சதவிகிதமாகும். இச்சாதிகளில் வன்னியர்கள் எண்ணிக்கையில் அதிகம் உள்ளனர். வன்னியர்களுக்கு அடுத்த நிலையில் தலித்துகளும், மீனவர்களும் உள்ளனர். நான்காம் நிலையில் உள்ள கிராமணிகள் முதல் நிலையிலும் (6இடங்கள்), முதல் நிலையில் உள்ள வன்னியர்கள் மூன்றாம் நிலையிலும் உள்ளனர். 10 சதவீதத்திற்கும் குறைவான முதலியார்களும், ரெட்டியார்களும் 8 இடங்கள் பெற்றிருப்பது புதுச்சேரியின் பெரும் பான்மைச் சாதிகளின் பிடியில் இல்லையென்பது தெளிவாகிறது. டாக்டர்

படிப்பகம்

www.padippakam.com

ராமதாஸ் எதிர்பார்ப்பின்படி தற்போதைய சட்ட மன்றத்தில் 14 பேர் பிற்படுத்தப்பட்ட சாதியினராக இருக்கும் நிலையில் வன்னியர்களின் எண்ணிக்கை குறைவிற்கு அவருடைய இரண்டரை வருட ஒப்பந்த ஆட்சி முறை பிரச்சாரம்தான் காரணம். புதுச்சேரி ஆட்சி அதிகாரத்தில் ரெட்டியார், முதலியார்களை அடுத்து கிராமணி சாதியினர் முன்னேறிக் கொண்டு இருக்கிறார்கள். வன்னியர்கள் தங்களைப் போன்ற தாழ்த்தப்பட்டோரை எதிரியாகவே



புதிய முதல்வராக சண்முகம் பதவி ஏற்றபோது

கருதிக்கொண்டு இருப்பதையும் இழந்து கொண்டிருக்கின்றார்கள்.

## தலித் வேட்பாளர்கள்

புதுச்சேரியில் 5 தனித் தொகுதிகள் உள்ளன. பாகூர், ஏம்பலம், திருபுவனை, உசுடு, நெடுங்காடு ஆகிய தொகுதிகளில் மொத்தம் 41 தலித்துக்கள் போட்டியிட்டுள்ளனர். இவர்களில் 22 பேர் சுயேட்சைகள். 3 பேர் பெண்கள், இம்மூவரில் இருவர் முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்கள் (ச.ம.உ). ஒருவர் டாக்டர் பட்டம் பெற்றவர். தி.மு.க. காங்கிரஸ், அ.தி.மு.க தலா மூன்று தொகுதிகளிலும் (விடுதலை சிறுத்தைகள் இருவர் உதய சூரியன் சின்னத்தில் போட்டியிட்டதால் சட்டப்படி இவர்கள் தி.மு.க வேட்பாளர்கள் என்று குறிப்பிட வேண்டியுள்ளது) பா.ம.க, ம.தி.மு.க, பு.ம.கா, த.மா.கா தலா இரு தொகுதிகளிலும் இ.பொ.க(மா) இ.பொ.க(மா.லெ) தலா ஒரு இடத்திலும் போட்டியிட்டன. இ.பொ.க. பா.ஜ.க ஆகிய கட்சிகள் தனித் தொகுதிகளில் வேட்பாளரை நிறுத்தவில்லை. அ.தி.மு.க மட்டுமே ஒரு தலித் பெண் வேட்பாளரை நிறுத்தியது.

இத்தேர்தலில் சந்திரராசு, இராசவேலு, கந்தசாமி ஆகிய முன்னாள் தலித் அமைச்சர்கள் போட்டியிட்டு முதல் இருவரும் வெற்றிப் பெற்றுள்ளனர். சட்ட மன்ற முன்னாள் தலித் உறுப்பினர்கள் மாரிமுத்து(காங்கிரஸ்), அரசி, கோமளா, சிவலோகநாதன்(அ.தி.மு.க) விசுவநாதன் (பா.ஜ.க), மாரிமுத்து (தி.மு.க), ராஜாராம் (த.மா.கா), ஏழுமலை (பு.ம.கா) மற்றும் தெய்வ நாயகம், அரிகிருஷ்ணன் ஆகியோர் போட்டியிட்டனர். இவர்களில் ஏழுமலை மட்டும் வெற்றிப்பெற்றுள்ளார். தாங்கள் அங்கம் வகித்த கட்சிகளில் சீட்டு கிடைக்காத நிலையில் கட்சி மாறி போட்டியிட்ட தலித்துகளும் உண்டு. காங்கிரசிலிருந்து பு.ம.கா விற்கு மாறிய ராசவேலு, அ.தி.மு.க விலிருந்து காங்கிரசுக்கு மாறிய முத்துக்கிருஷ்ணன், த.மா.க, பா.ஜ.க, அ.தி.மு.க கட்சிகளிலிருந்து வெளியேறி சுயேட்சைகளாகப் போட்டியிட்ட ராஜாராம், விஸ்வநாதன், கோமளா ஆகியோரும் அடங்குவர். இவர்களில் ராஜவேலு, நீல. கங்காதரன் ஆகியோர் வெற்றிப்பெற்றுள்ளனர்.

இதுதவிர, கல்வி, அரசு வேலைவாய்ப்புகளுக்கான ஒதுக்கீடுகளில் முன்னேறியவர்களும் போட்டியிட்டனர். பழனிவேலு (வி.சி), நீல.கங்காதரன் (காங்கிரஸ்), முத்துக்கிருஷ்ணன் (ம.தி.மு.க பாலாபழனி (லோக்ஜன சக்தி), தெய்வநாயகம், பலராமன் (பா.ம.க) பி. அங்காளன் (காங்கிரஸ்), சிவசக்தி (லோக் ஜன சக்தி), விசுவநாதன் (பா.ஜ.க) ஆகியோர் குறிப்பிடத்தக்கவர்கள். தலித் தொழிலதிபர்கள் சிலர் போட்டியிட்டனர்.

இவர்களில் குறிப்பிடத்தக்கவர் ஏம்பலம் தொகுதியில் போட்டியிட்ட பெரியசாமி என்பவராவார். அதேசமயம், கட்டிடத் தொழிலாளி செல்வக்குமார் என்பவரும் போட்டியிட்டார்.

தற்போதைய தலித் சட்டமன்ற உறுப்பினர்கள் காங்கிரசை சேர்ந்த நீல. கங்காதரன், சந்திரராசு, பி.அங்காளன் மற்றும் புதுச்சேரி மக்கள் காங்கிரஸ் ஏழுமலை, ராசவேலு ஆகியோராவர்.

தி.மு.க—வைச் சேர்ந்த முன்னாள் சட்ட மன்ற உறுப்பினர் பூ.மூர்த்தி அக்கட்சியில் சீட்டுக் கிடைக்காத நிலையில் த.மா.கா வின் சார்பில் மனுதாக்கல் செய்தார். அவர் தமிழ்நாட்டு தலித் என்று கூறி அவரது மனு தள்ளுபடி செய்யப்பட்டது. கடந்த 8 வருடங்களாக உள்ளூர் தலித்—வெளியூர் தலித் (Local-Migrated) எனும் பிரச்சனையின் உச்ச கட்டம் இது. தலித் மக்களைப் பிளவுபடுத்திய இத்துரோகச் செயலைத் தொடங்கி வைத்தவர்களில் ஒருவரான முன்னாள் சட்ட மன்ற உறுப்பினர் மாரிமுத்து காங்கிரஸ் கட்சியில் சீட்டு கிடைக்காமல் சுயேட்சையாகப் போட்டியிட்டு 300க்கும் குறைவான வாக்குகள் பெற்று தலித் மக்களால் ஒதுக்கி வைக்கப் பட்டுள்ளார்.

வினை விதைத்தவன் தினை அறுக்க முடியாது. தலித் மக்களை உள்ளூர்,வெளியூர் என்று பிளவு படுத்திய காங்கிரஸ் கட்சி அதே காரணத்திற்காக இன்று தமது இரண்டு தலித் சட்டமன்ற உறுப்பினர்களை காவு கொடுக்கும் நிலையில் உள்ளது.

ஒருவர் தமிழ்நாட்டுக்காரர், மற்றொருவர் மதம் மாறிய கிறிஸ்தவர் என்ற குற்றச்சாட்டை எழுப்பி அவர்களின் பதவியை ரத்து செய்து அவர்கள் மீது கிரிமினல் வழக்குத் தொடர வேண்டுமென்று தி.மு.க கூட்டணியினர் ஆளுநரிடம் மனு கொடுத்துள்ளனர். குற்றச்சாட்டு தொடுத்துள்ளவர்களில் ஒருவர் விடுதலைச் சிறுத்தை அமைப்பின் ஏம்பலம் தொகுதி வேட்பாளர் சு.பழனிவேலு. ஆசை வெட்கம் அறியாது என்பார்கள். சட்ட மன்ற உறுப்பினர் பதவி மூலம் கிடைக்கும் சொகுசு வாழ்க்கைக்கும், கோடிக்கணக்கில் கிடைக்கும் பணத்திற்கும் முன்னே விடுதலையாவது மயிராவது.

*-தலித் சுப்பையா*



படிப்பகம்

www.padippakam.com

# கற்பிப்பதோ காதல் லீலைகள்....



விழுப்புரம் மாவட்டம், செஞ்சி வட்டம் கவரை கிராமத்திலுள்ள அரசினர் ஆதிதிராவிடர் மேல்நிலைப் பள்ளியில் அப்பகுதியிலுள்ள தாழ்த்தப்பட்ட மாணவ மாணவிகள் பயின்று வருகின்றனர்.

பள்ளியம்பட்டு கிராமத்தைச் சேர்ந்த ஏழுமலை, நீலா இவர்களின் மகள் செல்வி வருங்கால கனவுகளுடன் கவரை பள்ளியில் பத்தாம் வகுப்பு படித்து வந்தாள். படிப்பிலும் படுசுட்டி. இதோடு அவளுடைய அழகும் அதே பள்ளியில் பணி புரிந்த பூங்காவனத்தை சுண்டி இழுத்தது.

மாணவி என்றும் பார்க்காமல் ஆசிரியர் பூங்காவனம், மாணவி செல்விக்குக் காதல் வலை வீசினார். தன்னுடைய வகுப்பு மாணவர்கள் மூலம் தூதுவிட்டார். கடிதங்களைப் பறக்கவிட்டார். ஒரு கட்டத்தில் மிரட்டியும் காரியத்தைச் சாதித்தார்.

ஆசிரியர் பூங்காவனத்தின் இடைவிடா தொல்லையால் பணிந்துப்போன செல்வி நாளுக்கு நாள் ஆசிரியர் மேல் காதலையும் வளர்த்து வந்தார். தன்னுடைய தொடையில் ஆசிரியரின் பெயரை சூடுவைத்து எழுதிக்கொள்ளும் அளவிற்கு இவர்களுடைய காதல் வளர்ந்தது.

பூங்காவனம் இல்லாமல் தன்னால் ஒரு நிமிடம்கூட வாழ முடியாது என்ற நிலைக்கு செல்வி தள்ளப்பட்டாள். ஆசிரியர் மாணவி என்ற உறவு உடைந்தது.

இதை தனக்குச் சாதமாகப் பயன்படுத்திக்கொண்ட ஆசிரியர் பூங்காவனம் செல்வியைப் பல இடங்களுக்கு அழைத்துச் சென்றார்.

செல்வியின் உடலை அனுபவிக்க துடித்து பல ஆசை வார்த்தைகளை அள்ளி வீசினார் பூங்காவனம். அவரின் ஆசை வார்த்தை யிலும், தன்னைத்திருமணம் செய்து கொள்வதாக ஆசிரியர் கூறியதையும் நம்பி செல்வி தன்னை முழுவதும் ஆசிரியர் அனுபவிக்க அனுமதித்தாள்.

செல்வியை வாய்ப்புக் கிடைக்கும்போதெல்லாம் அனுபவித்த பூங்காவனத்திற்கு, வேறொரு பெண்ணைத் திருமணம் செய்து வைக்க பூங்காவனத்தின் முழு ஆதரவோடு ஏற்பாடுகள் செய்யப் பட்டன.

இதனைக் கேள்வியுற்ற செல்வி துடிதுடித்துப்போய் பூங்கா வனத்திடம் ஓடி வந்தாள். எதைப் பற்றியும் கவலைப்படாத பூங்கா வனம், ஒன்றும் நடக்காதது போல் செல்வியிடம் காட்டிக் கொண்டார். "ஆசிரியர் மாணவி கல்யாணம் செய்து கொண்டால் ஊர் உலகம் என்ன பேசும் பேசாம நீ வேறொருத்தரை பார்த்து கல்யாணம் செய்துகொள் என்னால் உன்னை கல்யாணம் செய்து கொள்ளமுடியாது. எனக்கு வீட்ல வேற பெண்ணை பார்த்துட்டாங்க" என செல்வியை விரட்டி விட்டார் ஆசிரியர் பூங்காவனம்.

செய்வதறியாது செல்வி வீட்டிற்கு ஓடி யாரும் இல்லாத நேரத்தில் விஷம் குடித்துவிட்டு தன்னுடைய உயிரை மாய்த்துக் கொண்டாள். ஒரு ஆசிரியரின் காம வெறியால் மாணவியின் உயிர் பறிபோனது.

பூங்காவனம் பணி செய்த பள்ளிகளில் இதேபோலதான் பல பெண்களை ஏமாற்றியுள்ளார். கல்லாலிபட்டு பள்ளியிலும் இதேபோன்ற செயலில் ஈடுபட்டதால் அக்கிராமத்தில் பொதுமக்களால் அடித்து துரத்தப்பட்டவர் இந்த ஆசிரியர் என்பது நமது விசாரணையில் தெரியவந்தது.

சம்பவம் நடந்த கவரை மேல்நிலைப்பள்ளியிலும் வேறொரு மாணவியைக் கர்ப்பமாக்கி பிறகு கருவைக் கலைத்த சம்பவம் கூட உண்டு என பொதுமக்கள் கூறுகின்றனர்.

தந்தை போலிஸ்காரராகவும் அண்ணன் வழக்குரைஞராகவும் இருப்பதால் **"எவனும் என்னை ஒன்னும் செய்ய முடியாது"** என சவால் விடுகிறார் ஆசிரியர் பூங்காவனம்.

சட்டமோசாட்சி இல்லையென மௌனம் காக்கின்றது.

மக்கள் திரண்டால் மௌனம் களையலாம்.

—உஷா



படிப்பகம்

www.padippakam.com



# மனிதகுல தொண்டாளன் பிரெடெரிக் ஏங்கல்ஸ்

மனித குல மேம்பாட்டுக்காக, அவர்களின் தாழ்வுற்ற வாழ்க்கை நிலை மாறவும், இந்நிலை எப்படி வந்தது? எப்படி வீழ்த்துவது என ஓராயிரம் பேர் இந்தப் பூபாளத்தில் தோன்றி இருக்கலாம்.

தோழர் லெனின் சொன்னதுப் போல் மனித குல விடுதலைக்கும், வீழ்ந்துகிடக்கும் உழைப்போர் இழி நிலைக்கும் காரணம் தேடியோர் சில கேள்விகளைக் கேட்டு பதில் கூற முடியாமல் ஓய்ந்து போனார்கள். ஆனால் விடுதலைக்கு வழியும் கூறி அவரும் தன்னை ஈடுபடுத்திக் கொண்ட மாமேதை காரல் மார்க்ஸ் ஒருவர்தான் என்றார்.

இந்த மாமேதை தன்னோடு இணைத்துக்கொண்டு போராடினாரே, மற்றும் அவரின் தொல்லை மிகு வாழ்வில் சுடர் அவ்வப்போது ஏற்றினாரே பிரெடிரிக் ஏங்கல்ஸ் என்கிற தோழர் அவரை நினைவு கூறவே இக்கட்டுரை.

ஹிட்லர் எனும் சண்டாளன் பிறந்த ஜெர்மனி மண்ணில் மக்கள் தொண்டாளன் பிரடெரிக் ஏங்கல்ஸ் தோன்றினார்.

மன்னர்கள் ஆட்சிக் காலத்தில் பிரபுவின் மகனாக மத மடைமைகளிலும், பணக்கார அகங்காரத்திலும் ஊறித்திளைத்த குடும்பத்தில் தோன்றியவர்.

ஆனாலும் மக்களின் துயரங்களையும் அவர்கள் படும் வேதனையையும் கண்ணுற்று முதலாளித்துவ கொடுமைகளுக்கு எதிராக தன் சின்னஞ்சிறு பிராயத்திலேயே முடிவெடுத்தார். முதலாளிகள் மட்டுமல்ல, மதகுருமார்களும் மக்களின் இந்நிலை தொடரவே விரும்புகின்றனர் என்பதை கண்டபோது. மதத்தையும், கடவுளையும் வெறுத்தார்.

அங்கொன்றும் இங்கொன்றுமாக பல்வேறு மொழிகளில் வெளியான புரட்சிகர கருத்துக்களை படித்தார். சமூகத்தை அதனோடு இணைத்துப் பார்த்தார், மேலும் படிக்கவும், தன் நண்பர்களுடன் வாதிக்கவும் செய்தார்.

தன் 18, 19 வயதிலேயே ஆறேழு மொழிகளில் தேர்ச்சி பெற்று முடிந்தவரை பல்வேறு புத்தகங்களைப் படித்தார்.

உலகெங்கும் இடதுசாரிக் கருத்துக்கள் கொண்ட அறிஞர்கள் பல்வேறு பத்திரிகைகளில் கட்டுரைகள் எழுதி வந்தனர். அவைகளை படித்து ஆய்ந்து அதற்கு பதங்கள் எழுதுவதும் தன் பார்வையில் ஆய்வில் கண்ட முடிவுகளை பல்வேறு நாட்டுப்பத்திரிக்கைகளில் எழுதி வந்தனர்.

பல்வேறு நாட்டு அறிஞர்பெருமக்கள் தொடர்பு கிடைத்தது. மேலும், மேலும் ஆய்வுகளை செய்துகொண்டே இருந்தார்.

இக்காலங்களில்தான் மாமேதை காரல்மார்க்ஸ் பல்வேறு பத்திரிகைகளில் கட்டுரைகள் எழுதி வந்தார். அவரின் புகழ் உச்சத்தில் இருந்தது. அவரின் கட்டுதூரைகள் இல்லை என்றால் இதழே படுத்துவிடும் என்ற நிலை. இதில் ஒரு வேடிக்கை என்னவென்றால் மார்க்சின் கட்டுரைகளை ஏங்கல்சும், ஏங்கல்சின் கட்டுரைகளை மார்க்சும் படித்து வியந்து உள்ளனர் ஒருவரை ஒருவர் பார்க்காதவண்ணம்.



ஏங்கல்சின் மனைவி லிஸ்ஸி பியோர்ன்ஸ்

பின்னால் மார்க்சும், ஏங்கல்சும் இணைந்து ஒருவருக்கொருவர் நன்கு புரிந்து பல்வேறு ஆய்வுகளை நடத்தினர். உலகை நடுங்கவைத்த கம்யூனிஸ்ட் அறிக்கையை தயாரித்தனர்.

மூலதனம் என்கிற மாபெரும் பொருளாதார நூலை மார்க்ஸ் எழுதிட ஏங்கல்ஸ் எண்ணற்ற உதவிகளைச் செய்தார்.

வறுமையில் வாழ்ந்த மார்க்ஸ் குடும்பம் ஏங்கல்சின் பொருளாதார உதவியால் தட்டுத்தடுமாறி வாழ்ந்து வந்தது.



படிப்பகம்

www.padippakam.com

இதில் ஒரு வேடிக்கை இங்கிலாந்தில் உள்ள பஞ்சாலை அதிபரின் மகனான ஏங்கல்ஸ் தன் குடும்பத்தவர்களின் நெருக்கடியால் ஆலையை கவனிக்கச் சென்று விட்டார். இரண்டு, மூன்று ஆண்டுகள் மார்க்சுக்கும், ஏங்கல்சுக்கும் தொடர்பில்லை. இந்நிலையில் படித்தல், ஆய்வுசெய்தல், பல்வேறு நாட்டு அறிஞர்களுடன் வாதிடல், பொதுப் பிரச்சனையில் தலையிட்டு போராடுதல் என மார்க்சின் காலம் பொருளாதார பிரச்சனைகளோடு நடக்கிறது.

ஏங்கல்ஸ் எங்கிருப்பார்? அவரிடம் பொருளுதவிக் கேட்கலாமே என்ன செய்வது என மார்க்ஸ், ஏங்கல்சின் முகவரிக்கு அலைகிறார்.

ஏங்கல்சோ மார்க்சை எங்கு தேடுவது? குடும்ப வற்புறுத்தலால் இங்கு வந்து நான் மாட்டிக் கொண்டேனே எனக்கிருக்கும் பல்வேறு சந்தேகங்களை அவரிடம் கேட்டு தெளிவு பெறுவேனே என அங்கலாய்த்துக்கொண்டிருக்கிறார்.

இந்நிலையில் ஏங்கல்ஸ் தந்தை மரணமடைந்துவிடுகிறார். பின் சில மாதங்கள் கழித்து மார்க்சின் முகவரி ஏங்கல்சுக்கு கிடைக்கிறது. உடனே ஒரு கடிதம் எழுதுகிறார். அதில், மார்க்ஸ், தான் தங்களை எங்கெல்லாம் தேடுகிறேன் இரு தினங்களுக்கு முன்தான் தங்களின் முகவரி கிடைத்தது. இனி நேரில் சந்திப்போம். முக்கியமான செய்தி என் தந்தை இரண்டு மாதங்களுக்கு முன் இறந்துவிட்டார் என்று எழுதி முடிக்கிறார்.

இக்கடிதம் கிடைத்த உடன் மார்க்ஸ் மிக்க மகிழ்ச்சி கொள்கிறார். கோடையில் மழைபெய்ததைப்போல் மகிழ்கிறார். ஆகா, என் பிரச்சனைக்கு வழி கண்டு கொண்டேன் என மகிழ்ந்து உடனே ஒரு கடிதம் ஏங்கல்சுக்கு எழுதுகிறார்.

ஏங்கல்ஸ் உன்னை நான் தேடித்தேடித் தவித்துப்போனேன். நான் மிகக் கொடிய வறுமையில் இருக்கிறேன் உடனே எனக்கு பணம் அனுப்பிவை அதனை எதிர்ப்பார்த்து காத்திருக்கிறேன். என எழுதி அனுப்பினார்.

இதனைப் படித்த ஏங்கல்ஸ் மனம் நொடிந்து என் தந்தை இறந்து போனார் என நான் எழுதியிருந்தும் அதற்கு பரிவாகக் கூட ஒருவார்த்தை எழுதவில்லையே இந்த மனிதர் எனக் கோபப் பட்டார்.

ஆனால் சிறிது நேரத்திலேயே மனம் நெகிழ்ந்து கூறினார். இரைக்குக் காத்துக்கிடக்கும் குஞ்சுப்பறவைப்போல் இவரை வறுமை ஆக்கிவிட்டதே. எப்படிப்பட்ட சிந்தனையாளன், ஓய்வறியா படிப்பாளி! இவரைக்கூட வறுமை இப்படி வாட்டிவிட்டதே என எண்ணி உடனே பணத்தை அனுப்பினார். பின்நாளில் இருவரும் சேர்ந்தே பல வேலைகளைச் செய்தனர். மார்க்ஸ் "மூலதனம்" நூலினை எழுதவேண்டும் என அவருக்கு எந்த தொல்லையும் கொடுக்காது. மார்க்சும், ஏங்கல்சும் பேசிக்கொண்டு தனித்தனியாக வேலைகளைப் பிரித்துக் கொண்டனர்.

பல்வேறு நாட்டு பத்திரிகைகளில் வரும் கட்டுரைகளுக்கு பதில் எழுதுவதும், இயக்க வேலைகளை கவனிப்பதுமாக ஏங்கல்ஸ் இருந்தார். மார்க்சோ மூலதனம் இரண்டு பாகங்களை முடித்துவிட்டு ஏனைய பாகங்களுக்கு குறிப்பு எடுத்து வைத்திருந்தார். இந்தக் குறிப்புகளையும், விளக்கங்களையும் மார்க்சை தவிர ஏங்கல்ஸ் மட்டுதான்அறிவார். இரண்டு பாகம் முடித்த நிலையில் இன்னும் தொடர்ந்து எழுதிட தன்னால் இயலாது என் உடல் நிலை எனக்கு ஒத்துக்காது என எண்ணிய மார்க்ஸ் குறிப்புகளை எல்லாம் ஏங்கல்சிடம் ஒப்படைத்தார்.

1883 மார்ச் 14 நாள் மாலை மார்க்ஸ் மரணமடைந்தார். அப்போது அவரின் உண்மைத்தோழர் ஏங்கல்ஸ் கூறினார் நமது கட்சியின் மிக வல்லமை வாய்ந்த மூளை சிந்திப்பதை நிறுத்திவிட்டது. எக்காலத்துக்கும் எனக்குத் தெரிந்த இதயங்களிலேயே சக்தி மிக்க இதயம் துடிப்பதை நிறுத்திவிட்டது...

தனது உணர்வுப் பூர்வமான வழித்துணைவரை, உண்மை மிக்க



இஸ்ட்போர்னில் ஏங்கல்சின் அஸ்திப்பெட்டி இறக்கப்பட்ட இடம்

நண்பரை, போராட்ட தோழரை இழந்துவிட்டேன்...

தனக்கென ஒரு சொந்த எதிர் கூட இல்லாதவன் மார்க்ஸ் என வியந்து கூறினார்.

பின்னர் மார்க்ஸ் நிறுத்திய மூலதன நூலை அவரின் குறிப்புகளைக் கொண்டு, ஆதாரங்களுடன் எழுதி முடித்தார். 12 ஆண்டுகள் ஓய்வறியாது உழைத்தார்.

ஒரு முறை இங்கிலாந்தில் நடைபெற்ற இயக்க கூட்டத்தில் பிரெஞ்சு ஜெர்மனி ஆகிய மொழிகளில் ஒரு சிறப்பான உரை நிகழ்த்தினார் ஏங்கல்ஸ் மிக நீண்ட நேரம் அவையோர் கையொலி எழுப்பினர். அப்போது ஏங்கல்ஸ் சொன்னார் நீங்கள் கைதட்டி வரவேற்றீர்களே அந்த உரை உங்களிடம் ஆற்றிட எனக்கு உரம் தந்தவர் அதோ அந்த படத்தில் உள்ள மாமனிதன்தான் என மார்க்ஸ் படத்தை காட்டினார்.

எப்படிப்பட்ட அறிவார்ந்த நண்பர்கள்!

1820 நவம்பர் 28 ல் தோன்றிய ஏங்கல்ஸ் 1895 ஆகஸ்டு 5 ம் நாள் இரவு காலமானார்.

-ம. நவநீதன்



படிப்பகம்

www.padippakam.com

# ஏ.சி.எஸ் –ன் தேர்தல் வெறியாட்டங்கள்



தி :மு.க கூட்டணியில்
...ட் கிடைத்தவுடனேயே எப்படியாவது
...து சொந்த ஊரான ஆரணி
...ாகுதியில் வெற்றிப்பெற்றிட வேண்டும்
...ற வெறியோடு தேர்தல் களத்தில்
...ங்கினார் முதலியார்களுடைய புதிய
...க்கட்சி நிறுவனத் தலைவர் ஏ.சி. சண்முகம்.

கோடிகள் செலவழிந்தாலும் தனது
...ற்றிக்கெதிராக நிற்பவன் எவனாக இருந்தாலும்
...ேத்துக்கட்டி பதவி சுகத்தை
...னுபவித்தேதீரவேண்டும் என்று நாயாய் பேயாய்
...லைந்தனர் ஏ.சி.எஸ்சும் அவருடைய
...டியினரும்.

இவர்களுடைய வெறித்தனத்திற்கு
...ரையாகிப்போனது அரையாளம் கிராம
...ந்த்தப்பட்ட மக்கள்தான்.

10.05.2001 அன்று தமிழக தேர்தல் நாள்.
...னைத்து தொகுதிகளிலும் பல்வேறு
...வரங்களுக்கிடையில் மக்கள் வாக்களித்துக்
...ாண்டிருந்தனர். மக்களுடைய அமைதி
...்க்கையை கெடுத்துக் கொண்டிருந்தது இந்தத்
...தல். ஆரணி தொகுதியில் சற்று கூடுதலாகவே
...தல் டென்ஷன் தொற்றிக்கொண்டிருந்தது.

எப்படியும் சட்ட மன்ற உறுப்பினரா
...ிட வேண்டும் என கங்கணம் கட்டிக்
...ாண்டிருந்த ஏ.சி.எஸ் முதலியார் தன்னுடைய
...பலத்தால் தொகுதி முழுவதும் அடியாட்களை
...க்கிவிட்டிருந்தார். அவர்களுடைய இலக்கே
...் மக்கள்தான் என்பதுபோல அவர்களுடைய
...ல்கள் அனைத்தும் இருந்தன.

ஆரணி தொகுதிக்குட்பட்ட அரையாளம்
...மம்தான் ஏ.சி. எஸ் க்கு பூர்வீக இடம். இங்கு
...லியார்களுக்கு இணையாக தலித் மக்களும்
...ளனர். தன்னுடைய இனத்தைச் சேர்ந்தவர் இந்த



மணிகண்டன்



பன்னீர்

தொகுதியில் நிற்பதால் அ.தி.மு.க வில் தீவிரமாகச் செயல்பட்டுக் கொண்டிருந்த அரையாளம் கிராமத்து முதலியார்கள் தங்களுடைய கரை வேட்டியை தற்காலிகமாக கழட்டி வைத்துவிட்டு. தங்களுடைய சாதி விசுவாசத்தைக் காண்பிக்க ஏ. சி. எஸ் –ற்காக களமிறங்கினர்.

அதோடு மட்டுமல்லாமல் அவர்களுடைய ஒவ்வொரு செயலும் வெறித்தனமாகவே இருந்தது. இந்நிலையில் அரையாளம் கிராமத்திலிருக்கின்ற தலித் மக்கள் பெரும்பாலும் அகில உலக டாக்டர் அம்பேத்கர் நூற்றாண்டு இயக்க உறுப்பினர்களாக இருப்பதால் இயக்க கொள்கைகளுக்கேற்றப்படி அன்றைய தினம் முழுவதும் ஓட்டுப்போடாமல் தேர்தலைப் புறக்கணித்துக் கொண்டிருந்தனர்.

அரையாளம் கிராமத்தில் ஒரு சிலர் அ.தி.மு.க வை ஆதரிக்கும் அம்பேத்கர் மக்கள் இயக்க உறுப்பினர்களாக இருந்து வருகின்றனர். இவர்களில் ராமன். கோட்டி. பன்னீர். மணிகண்டன்.ஏழுமலை. மனோகரன் ஆகியோர் ஓட்டுப்போடுவதற்காகச் சென்றனர். வாக்கு பதிவு முதலியார் பகுதிகளில் நடைபெற்றுக் கொண்டிருந்தது.

ஏ.சி.எஸ் முதலியாருக்காக வேலை செய்து கொண்டிருந்த அரையாளம் முதலியார்களின் பிடியிலேயே இருந்தது வாக்குச்சாவடி. தலித்துகள் சிலர் மாலை நேரத்தில் வாக்குச்சாவடி சென்றபோது

## ஓட்டின் விலை

ஆரணி தொகுதிக்குட்பட்ட கிராமங்களில் அகில உலக டாக்டர் அம்பேத்கர் நூற்றாண்டு இயக்கம் மிக வலுவான நிலையில் உள்ளது. இயக்கத்தின் கொள்கைப்படியும், செயற்குழு தீர்மானத்தின்படியும் தங்களின் அடிப்படை வசதிகளை வலியுறுத்தி தேர்தலைப் புறக்கணிப்பதென மக்கள் தீர்மானித்தனர். பல கிராமங்களில் எந்த அரசியல் கட்சிக்காரர்களையும் தலித் மக்கள் அனுமதிக்கவில்லை. இதே நிலைதான் ஏ.சி.சண்முகத்திற்கும் ஏற்பட்டது. கடுப்பாகி போன ஏ.சி.எஸ் தலித் மக்களை விலை கொடுத்து வாங்க திட்டம் தீட்டி அம்பேத்கர் நூற்றாண்டு இயக்க தலைவர் அரையாளம் தாஸி –ற்கு தூதுமேல் தூதுவிட்டு தானே இரண்டு முறை தாஸை தேடிச்சென்று பல லட்சங்கள்வரை பேரம் பேசினார். எதற்கும் தாஸ் அசைந்துக் கொடுக்காததால் கலக்கமடைந்த ஏ.சி.எஸ் தரப்பு தேர்தல் நேரத்தில் கலவரத்தை உண்டாக்க திட்டம் தீட்டி அதை செய்து முடித்தனர். ஓட்டுக்கு ரூ. 50 என விலை பேசியது ஏ.சி.எஸ் தரப்பு.

முதலியார்கள் “மரியாதையா நீங்களெல்லாம் அண்ணன் ஏ.சி.எஸ் ற்கு டிவி சின்னத்திற்குத்தான் ஓட்டுப் போடவேண்டும் இல்லைன்னா இந்த எடத்தவுட்டு நீங்க போகவே முடியாது” என மிரட்டினர். அதை மறுத்த தலித்துகள் “எங்களுக்கு விருப்பமானவங்களுக்குத்தான் நாங்கள் ஓட்டுப் போடுவோம்” எனக் கூற முதலியார்களுக்கு வெறி



படிப்பகம்

www.padippakam.com

## ஏசி.எஸ் – ன் சாகசங்கள்

1976 ம் ஆண்டு நடந்த தேர்தலில் ஆரணி சட்டமன்ற தொகுதி உறுப்பினரானார் (ADMK)

1982 ஆம் ஆண்டு நடந்த வேலூர் பாராளுமன்ற தேர்தலில் வெற்றிப் பெற்று பாராளுமன்ற உறுப்பினரானார். (ADMK)

1988 ஆம் ஆண்டு M.G.R மறைவுக்கு பிறகு எம்.ஜி.ஆர் ஜானகி அணியின் சார்பாக ஆரணி சட்டமன்ற தேர்தலில் இரட்டைப்புறா சின்னத்தில் நின்று தோல்வியுற்றார்.

அடுத்து ஆர்.எம்.வி யின் MGR கழகத்தின் பொதுச் செயலாளர் ஆனார் அதன்பிறகு MGR பாசறையைத் தனியாக ஆரம்பித்தார்.

இந்த இடைவெளியில் பல கல்வி நிறுவனங்களை நிறுவினார்.

1. MGR சொக்கலிங்க கலைக் கல்லூரி ஆரணி.
2. MGR பாலிடெக்னிக் ஆரணி.
3. ACS மெட்ரிக்குலேசன் ஆரணி.
4. இன்ஜினியரிங் காலேஜ் ஆரணி.
5. பார்வதியம்மா சொக்கலிங்கம் (A.C.S பெற்றோர்] கலையரங்கம் இந்த கலையரங்கம் சென்னையில் உள்ள MGR சமாதியைப் போலவே கட்டப் பட்டுள்ளது.
6. மதுரையில் இன்ஜினி யரிங் காலேஜ்
7. அருப்புக்கோட்டையில் மெடிக்கல் காலேஜ்
8. சென்னையில் பல கல்லூரிகளும், கல்வி நிறுவனங்களும் உள்ளன.

1986 – ல் A.C.S ன் திருமணம் நடைபெற்றது. ஆரணி நகரமே கின்னஸில் இடம் பெறும் அளவுக்கு ஆடம்பரமாக தோரணங்களும், கட்அவுட்டுகளும், மின்விளக்குகளுக்கென்று தனி டிரான்ஸ்பார்மர்கள் அமைக்கப்பட்டு திருமணம் நடைபெற்றது. மேலும் அப்போதைய முதல்வராக இருந்த திரு எம்.ஜி.ஆர் அவர்கள் அவரது திருமணத்திற்கு சிறப்பு விருந்தினராக வந்தார். ஆரணியின் ஆடம்பர அமர்க்களத்தை பார்த்த அவரே எ.சி.எஸ் யை கோபமாகத் திட்டினாராம். காரணம் ஏ,சி,எஸ் பரம்பரை பணக்காரர் அல்ல, எம்.ஜி,ஆர் பாசறைக்குப் பிறகு மீண்டும் அ,தி,மு,க வில் இணைந்தார். பிறகு அனைத்து முதலியார் பேரவை தொடங்கினார். இப்போது புதிய நீதிக் கட்சியை ஆரம்பித்து அதனுடைய நிறுவனத்தலைவரானார்.



ராமன்



கோட்டி

தலைக்கேறியது.

உடனே தயாராக வைத்துக் கொண்டிருந்த கொடிய ஆயுதங்களால் தலித்துகளை சரமாரியாக தாக்கினர்.

முதலியார்கள் தாக்குதலில் பலமாக அடிபட்ட ராமன், கோட்டி, பன்னீர், மணிகண்டன், ஏழுமலை, மனோகரன் ஆகிய தலித்துகள் இரத்த வெள்ளத்தில் மிதந்தனர். உடனே முதலியார்கள் அவர்கள் பகுதியிலிருந்த பழைய கீற்றுக்கொட்டாய்களைக் கொளுத்தி விட்டு, தலித்துகள்தான் தீயிட்டுக் கொளுத்தினார்கள் என காவல் நிலையத்தில் புகார் கொடுத்தனர்.

தாக்கப்பட்ட தலித்துகள் சிகிச்சைக்காக அரசு மருத்துவ மனையிலும், ஆபத்தான நிலையிலிருந்த கோட்டி, ராமன், பன்னீர் ஆகியோர் வேலூர் அரசு மருத்துவ மனையிலும் சேர்க்கப்பட்டனர். பாதிக்கப்பட்ட தலித்துகள் சார்பாக காவல்நிலையத்தில் புகார் கொடுக்கப்பட்டது.

வழக்கம்போலவே தலித்துகள் என்றால் மெத்தனப்போக்கைக் கடைபிடிக்கும் காவல்துறையினர் முதலியார்கள் யாரையும் கைது செய்யாமல் இழுத்தடித்துக்கொண்டு வந்தனர். உடனே அகில உலக டாக்டர் அம்பேத்கர் நூற்றாண்டு இயக்கத்தினர் போராட்டக் களத்தில் குதித்தனர். அதனால் அரையாளம் முழுவதும் போலிசார் குவிக்கப்பட்டனர்.

சம்பவம் நடந்த மறுநாளே ஏ.சி.எஸ் அரையாளம் கிராமத்திற்கு வந்து முதலியார்களைச் சந்தித்துவிட்டு கவலைப்படாதீர்கள் நான் பார்த்துக்கொள்கிறேன். எவ்வளவு செலவானாலும் பரவாயில்ல எனக்கூறி கரன்சியை வாரி இரைத்துவிட்டு சென்றிருக்கிறார்.

இதனால் மேலும் ஆக்ரோஷமடைந்த அம்பேத்கர் நூற்றாண்டு இயக்கத்தினரும், தலித் மக்களும் சாலை மறியலில் இறங்கினர். பதட்டமடைந்த போலிசார் கோரிக்கைகளை ஏற்றுக்கொள்வதாகவும் அதற்கான சமாதான கூட்டம் போடவிருப்பதாகவும் கூறி சாலை மறியலைக் கைவிடச் செய்தனர்.

12.05.2001 – அன்று ஆரணி வட்டாட்சியர் அலுவலகத்தில் செய்யாறு ஆர்.டி.ஓ தலைமையில் டி.எஸ்.பி வேலன், வட்டாட்சியர், அம்பேத்கர் நூற்றாண்டு இயக்க மாவட்ட தலைவர் அரையாளம் தாஸ் ஆகியோர் முன்னிலையில் சமாதானக் கூட்டம் நடைபெற்றது.

முதலியார்களின் பொய்யான வாதங்களைத் தவிடு பொடியாக்கிய மாவட்ட தலைவர் அரையாளம் தாஸ் தலித்துகளை தாக்கிய முதலியார்களையும் அவர்களைத் தூண்டிவிட்ட ஏ.சி. சண்முகத்தையும் வன்கொடுமை தடுப்புச் சட்டத்தில் கைது செய்யும்படி வாதிட்டார்.

விரைவில் தங்களுடைய கோரிக் கைகள் நிறைவேற்றப்படும் என சமாதானக் கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டது.

அரையாளம் தாஸ் நம்மிடம் கூறும்போது "அமைதியாக இருந்த ஆரணி தொகுதியை கெடுத்து குட்டிச்சுவராக்கியதே இந்த ஏ.சி. சண்முகம்தான். இவருக்குத் தமிழகம் முழுவதும பல கல்வி நிறுவனங்கள், தொழில் நிறுவனங்கள் இருப்பதால், கோடிக்கணக்கில் பணம் வைத்துக்கொண்டு இருப்பதால், தலித் மக்களை அழிக்க நினைக்கிறார். இப்படி இவர் அப்பாவி தலித் மக்களை அழிக்க நினைத்தால் அவருடைய பண பலத்திற்கும், சாதிவெறிக்கும் நிச்சயம் இந்த அகில உலக டாக்டர் அம்பேத்கர் நூற்றாண்டு இயக்கம் முடிவுக்கட்டும். சாதிக் கட்சியை வைத்துக்கொண்டு மக்களை ஏமாற்ற நினைப்பது ஒருபோதும் பலிக்காது" என ஆவேசமுற்றார்.

ஏ.சி சண்முகம் போன்ற சாதி தலைவர்கள் தலித் மக்களை அமுக்கி வைப்பதற்காகவே கட்சி ஆரம்பித்திருப்பது நூற்றுக்கு நூறு உண்மை என்பதே இந்த சம்பவம் சுட்டிக்காட்டுக்கின்றது. இதுபோன்ற சாதித் தலைவர்கள் உள்ள அரசியல் கூட்டணியிலிருந்து கொண்டு எந்தக் கொம்பனாலும் தலித் விடுதலையை வென்றெடுக்க முடியாது. ஒரு வெங்காயமும் பண்ணமுடியாது. ஆனால் இத்தேர்தல் புறக்கணிப்போ தலித் விடுதலையில் ஒரு மைல்கல்.

– களப்பிரியா



படிப்பகம்

www.padippakam.com

சிறுகதை



# ரியாதை

**பெரணமல்லூர் சேகரன்**

அப்புவின் பார்வை ரயிலுக்கு வெளியே பயணித்துக் கொண்டிருக்கும் குன்று, ஏரி, வாய்க்கால், மரம், செடி,கொடி என அனைத்தையும் ஊடுருவிச் சென்றது.

அந்தப் புலர்காலைப் பொழுதில் ஓடையில் ஒரு சிறுவன் எருமை மாட்டைத் தேய்த்துக் குளிப்பாட்டிக் கொண்டிருந்தான். இடையில் கட்டியிருந்த கோவணம் அவிழ சட்டென்று அவன் அதை சரி செய்து இழுத்துக் கட்டிக் கொண்டு வைக் கோலால் எருமை மாட்டின் முதுகைத் தேய்த்துக் கொண்டிருந்தான்.

அப்பாவின் உழைப்பு எப்படியெல்லாம் ரெட்டியாரால் உறிஞ்சப்பட்டது என்பது அடுக்கடுக்காய் வந்து போனது. முப்பாட்டன், பாட்டன், அப்பன் என்று வரிசையாய் ரங்காரெட்டி, ராகவரெட்டி, கண்ண ரெட்டிகளிடம் உழைத்து உழைத்து ஓடாகி கண்ட பலன்தான் என்ன?

அதே பனைஓலை, பன்றி குடிசை.... அடிமை வாழ்வு..... குடும்பத்தோடு ரெட்டியார் பண்ணைக்குச் சென்று மாடாய் உழைக்க வேண்டும். ஒரு வேளைக் கஞ்சி கிடைக்கும். மாதாமாதம் தருகின்ற அற்ப நெல்லை அரிசியாக்கி அரைவயிறு கால்வயிறு என்று காலம் உருண்டது. அப்பாவுக்கு ஒரே பிள்ளையா னாலும் செல்லமாக வளர்க்க முடியவில்லை குப்பனால்.

குப்பனும், முனியம்மாளும் கண்ணரெட்டிக் குடும்பத்திற்கு விசுவாசமாய்த்தான் உழைத்தார்கள்.

இதுவரை யாரும் செய்யாத காரியத்தைச் செய்துவிட்டதாக கண்ணரெட்டி குப்பனை அடித்துத் துன்புறுத்தியது பசுமரத்தாணியாய்ப் பதிந்து போனது அப்புவுக்கு.

அப்படியென்ன செய்யாத காரியத்தைச் செய்துவிட்டார் குப்பன். உழைக்கிற உழைப்புக்குக் கூலி போதவில்லையென்று கூச்சல் போட்டாரா.. எட்டுமணிநேர வேலை உரிமை உலகெங்கும் ஆன பின்பும் வரையரையில்லாமல் வேலை செய்ய வேண்டியிருக்கிறதே..

கழனிவேலை, ரைஸ்மில்வேலை, என்று இதற்கு முடிவு கட்ட வேண்டுமென்று முயற்சித்தாரா.. பரம்பரையாய் தன் குடும்பம் செருப்பாய் உழைத்தது.. உழைக்கிறது.. உழைக்கும். அதனால் நஞ்சை, புஞ்சை கேட்டு வம்பு பண்ணினாரா.. எதுவுமில்லை

வழக்கமாய் பள்ளிக் கூடம் அனுப்பி ஒன்னாம் வகுப்பு ரெண்டாம் வகுப்பு வேண்டு மென்றால் படிக்க வைக்கலாம். அதற்குமேல் பிள்ளைகளைப் படிக்க வைத்தாலே அதிகம்தான். ஒரு படி மேலே போய் ஹைஸ்கூலில் அல்லவா பையனை சேர்த்து விட்டார் குப்பன். தாங்கிக் கொள்ள முடியுமா, கண்ணரெட்டியால்.. ஒரு மழை இரவில் வேலையெல்லாம் முடிந்து ஆண்டையோட வீட்டுப்புறக் கடையில் உதறலுடன் தலைப்பாகைத் துணியை அவிழ்த்து ஈர உடலை துடைத்துக் கொண்டிருக்கும்போதே வாங்கிய சாட்டை அடியை கதை கதையாக அப்பா சொன்னது இப்போது அப்புவின் கண்ணில் நீரை வரவழைத்துவிட்டது.

கண்களைத் துடைத்துக் கொண்டே ரயிலை நோட்டமிட்டான். எதிரில் படுக்கையில் படுத்திருந்த மனிதர் புரண்டு, புரண்டு கொட்டாவி விட்டுக் கொண்டிருந்தார். மீண்டும் பார்வை ஜன்னலுக்கு வெளியே சென்றது. நிமிர்ந்து உட்கார்ந்தான்.

அம்மா கொடுத்த ஆலோசனைப்படி தாய்மாமனிடம் படிக்க சென்றான் அப்பு. என்னதான் தாய்மாமன் ஆனாலும் அம்மாவும் அப்பாவுமாகுமா.. பள்ளிக்கூடம் போக வாய்ப்பு கிடைத்ததே ஒழிய கொஞ்ச கொஞ்சமாய் கழனிவேலைகள் இவன் தலையில் விழுந்தன. கஷ்டப்பட்டு காலத்தைக் கழித்தான். பத்தாம் வகுப்பில் கணக்கில் ஒரு மார்க்கில் கோட்டை விட்டான். அந்தக் கையோடு மாமா அவனை தங்கை முனியம்மாளிடம் விட்டு வைத்துவிட்டுப் போனான்.

நல்ல புள்ள பெத்து வைச்சிருக்கம்மா.. ஒரு வேலையில் சுறுசுறுப்பு உண்டா? வேலையில்தான் அப்படினு பார்த்தா படிப்பிலையும் தவறவிட்டு வந்து நிக்கிறான். எப்படியோ நீயாச்சு.. அவனாச்சு.

ஐந்து வருஷமாய் வேலையும் செஞ்சி படிப்பும் படிச்சி நல்ல பேர எடுக்க முடியல.. தன்னையே நொந்துகொண்ட அப்பு அன்று முழுக்க நரக வேதனை அடைந்தான். நள்ளிரவில் அப்பா வரும் வரை விழித்துக் கொண்டிருந்த அப்புவிற்கு அதிர்ச்சி அளித்தது அப்பாவின் வார்த்தைகள்.

ஏண்டா பயலே.. நீயாவது உருப்படுவனுதான் ரெட்டியார் எதிர்ப்பையும் மீறி மாமா வீட்டிற்கு படிக்க அனுப்பினேன். இப்படி வந்து நிக்கிறீயே வெக்கமா இல்லை.. உன் பொவிஷை உன் மாமன்காரன் பண்ணையில என்ன பார்த்து சொல்லிட்டுத்தான் போனான்.

ஆதரவாய் இருக்க வேண்டிய அப்பாவிடம் அப்பு இதை எதிர்பாக்க வில்லை. பாலைவனச் சோலையே எதிர்பார்த்த அவனுக்கு அனலாய் தகித்தது.

எலே.. நீ ஒன்னும் தேரமாட்ட.. உனக்கு படிப்பும் வேணாம்.. ஒன்னும் வேணாம்.. பேசாம என்கூட பண்ணைக்கு வந்துரு..

சொல்லிவிட்டு அவர் சாப்பிட்டுப் படுக்கபோன சம்பவத்தை அவனால் ஜீரணித்துக் கொள்ள முடியவில்லை.. இரண்டு நாட்களாய் அவன் மனதில் எதிர்காலம் குறித்த போராட்டம் தொடர்ந்தது.



படிப்பகம்

www.padippakam.com

வாழையடிவாழையாய் ஆண்டைக்கு அடிமைகளாய் மூதாதையர்கள் உழைத்தது போதும்.. இந்தச் சேற்றில் நானும் சிக்க வேண்டுமா.. கைகால்கள் இருக்கின்றன.. ஏதாவது நகரத்துக்குச் சென்று பிழைத்துக் கொள்ள வேண்டியதுதான்.

நண்பர்களிடம் விசயத்தைச் சொல்லிவிட்டு சென்னைக்கு பறந்தான் அப்பு. ஒரு வேளைச் சோற்றுக்கு எத்தனையோ நாட்கள்' கஷ்டப்பட்டான். தெருக்குழாய் தண்ணீரைக் குடித்து வயிற்றை நிரப்பியதும், ஓட்டல்களில் வேலைப்பார்த்ததும் மறக்கக் கூடியதா..

ஓட்டல் தொழிலாளர் சங்கத்தில் வாராது வந்த மாமணியாய் வந்து புதிதாகச் சேர்ந்த சங்கர் அப்புவின் உற்ற தோழனானான். ராணுவத்தில் ஆள்சேர்க்கும் செய்தியும் அதில் சேரும் வழிமுறைகளும் அப்புவுக்கு படகின் துடுப்பாய் ஆனது. எதிர் பாராதவிதமாய் அப்பு தேர்வு பெற்றது மகிழ்ச்சியின் எல்லைக்கு இட்டுச்சென்றது. பள்ளியில் படிக்கும்போதே விளையாட்டாய் பேசிக்கொண்டதெல்லாம் ஞாபகத்துக்கு வந்தது.

நம்ம வாழ்க்கையில் ராணுவத்தில் சேருகிற வாய்ப்புக் கிடைச்சா நழுவ விடக்கூடாதுடா.. இப்படிச் சொன்ன அப்புவிடம்....

ஆமாண்டா அப்பு உனக்கு ராணுவத்தில சேருகின்ற வாய்ப்பு கிடைக்கும்னு எனக்கு தோணுதுடா.. ஏன்னா என்னைப் போல் நீ ஒன்றும் நோஞ்சான் இல்லையே!

முரளியின் வார்த்தைகள் முத்தாக சத்தாக சத்தியமாகிப் போனது. காலச்சக்கரத்தில் மூன்று ஆண்டுகளும் ஓடிப்போனது. மாதத்திற்கு ஒரு கடிதம் போட்டான் அப்பு. அப்பாவின் அவலங்களைப் போக்க எப்படியேனும் ஆண்டைகளிடமிருந்து அவர்களை அழைத்துச் சென்றுவிட வேண்டும் என்ற வைராக்கியத்தில் இருந்தான்.

ரயிலில் இருந்து இறங்கிய அப்பு தோளில் ஒரு பையும் கையில் ஒரு பையுமாய் அதே கிராமத்து குயிலோசையுடன் நடந்து சென்றான். டிப்டாப்பாக இருந்த அப்புவின் முறுக்கு மீசையும் தோற்றமும் பழைய அப்புதானா என் சந்தேகிக்க வைத்தது. செருப்பே அறியாத அப்பு இப்போது அற்புதமான ஷூக்களுடன் சர்புர்ரென்று நடந்து சென்றான்.

ஊரைத் தாண்டித்தான் சேரிக்கு செல்ல வேண்டும். இதுவரை சேரி ஜனங்கள் யாரும் ஊருக்குள் காலில் செருப்போ, ஷூவோ போட்டுக்கொண்டு போனதில்லை. கம்யூட்டர் யுகத்திலும் இப்படிக் கொடுமை.. அதெல்லாம் இப்போது சிந்திக்க அப்புவுக்கு நேரமில்லை.. தேவையுமில்லை..

நெஞ்சு நிமிர்த்தி நடந்துவந்த அப்புவின் எதிரில் தெரிந்தது அந்தக் குன்று.. அதன் உயரத்தில் ஏறி நின்று தன்னுடைய ராணுவ சாதனையை உரத்துக் கூவ வேண்டும்போல் இருந்தது. ஆனால் தன்னைக் கட்டுப்படுத்தி நடக்கலானான்.

ரெட்டியார்களின் ஆக்கிரமிப்பிலும், அராஜகத்திலும் ,சுரண்டலிலும் சிக்கித் திணறியது அந்தக் கிராமம். பிரதான தெருவுக்கு வந்து நடக்கலானான். பஞ்சாயத்து ரேடியோ பாடிக்கொண்டிருந்தது. என்ன ஆச்சரியம் தெருவில் ஒருவருமில்லை! பாதி தெருவைக் கடந்துவிட்டான்.

வெள்ளை வெளேர் வேட்டிச்சட்டையில் அப்புவை பின் தொடர்ந்தார் கண்ணரெட்டியார். இரண்டுமுறை திரும்பிப்பார்த்த அப்புவை அடையாளம் கண்டுக்கொண்ட அவரின் நடை கூடிற்று. அப்பு அவரைக் கண்டு கொள்ளவில்லை. தேகமே பற்றி எரிந்தது அவனுக்கு. நிமிர்ந்து நடைபோட்டான்!



திடீரென்று அப்புவின் சட்டைக்காலரைப் பிடித்து இழுத்து திருப்பித் தூக்கி முகத்தில் நாலைந்துமுறை அறைந்து கத்தினான் கண்ணரெட்டியார்.

"பறப்பயலே எவளோ திமிர் இருந்தா இந்த கிராமத்தில இந்தத் தெருவுல ஷூபோட்டுக்குனு நடப்ப.. திமிர் பிடித்த ராஸ்கல் உன்ன எல்லாம் விட்டுவைக்க கூடாதுடா"

கத்தலை தொடர்ந்து ரெட்டியார்களின் தர்ம அடி மேலும் மேலும் விழவே அப்பு நிலைக் குலைந்து விழுந்தான்.

அந்தக் கழுதையோட உசுரு போயிடப் போகுது.. வாங்கடா போலாம்.. இந்தக் குரலுக்கு சொந்தக்கார ரெட்டியார் அப்புவின் ஷூக்களை இழுத்து வீசியெறிந்தார்.

பஞ்சாயத்து ரேடியோவில் செய்திக்கொத்து தெளிவாக எல்லோருக்கும் கேட்டது.

கடந்தவாரம் நடந்த கார்கில் போரில் அப்பு, உப்பல்சிங், இப்ராஹிம், சாலமன் ஆகிய ராணுவ இளைஞர்களின் கூட்டு முயற்சியால் எதிரிகளின் முகாம் அழிக்கப்பட்டதை பாரத பிரதமரும் பாதுகாப்பு அமைச்சரும் பாராட்டி வாழ்த்தினர்.

கிணற்றுக்குள் குரலைப்போல அப்புவின் செவிகளில் விழுந்த செய்தி மெல்ல அவனை எழுப்பியது. தட்டு தடுமாறி எழுந்தவன் சிதறிக்கிடந்த பைகளைப்பற்றி எடுத்து சாக்ஸ் கால்களுடன் நடக்கலானான்......



படிப்பகம்

www.padippakam.com

# சிலைகளை

—தலித் சுப்பையா

வீதியெங்கும் துரோகிகளின் சிலைஇருக்குது — இந்த
வெட்கக்கேட்டை மூடிமறைக்க விழநடக்குது
வாழும்போது சந்திசிரிச்ச கதைஇருக்குது — அந்த
வரலாற்றை மறந்துபோகும் வழக்கம்தொடருது.

சாதிக்கொரு நீதிசொன்னது மனுதருமமே — அந்தச்
சாக்கடையை மணம்என்றது காந்தியமே
தேசப்பிதா என்பதெல்லாம் சேரிக்குஇல்லே — காந்தி
சிலையினையே கண்டிடவரும் மதிப்பதுமில்லே.

அப்பன்தொழிலை பிள்ளைசெய்தல் தப்பில்லையென்றார் —சாதி
அடிப்படையை நிலைநிறுத்தும் தப்பினைச் செய்தார்
குலக்கல்வி திட்டம்சொன்ன குல்லுகப்பட்டன் — அந்தக்
கொடியவனை சிலைவடிவில் பார்ப்பதுவெட்கம்

தாசிமுறையை தவறுஎன்றார் முத்துலெட்சுமி — இந்து
சாத்திரத்தின் நியதிஎன்றார் சத்தியமூர்த்தி
பெண்ணியத்தை இழிவுசெய்த பிற்போக்குவாதி
புதுகையிலே சிலைவடிவில் காண்பதுஅநீதி.

கூலிகேட்ட வெண்மணியும் எரிந்ததுபாரு — அந்தக்
கொலையைசெய்தபண்ணைதப்ப உதவியதாரு
கருஞ்சிலையாய் முச்சந்தியில் நிற்பதைப்பாரு — ஒரு
விரலைக்காட்டி தமிழகத்தை ஏய்த்தநபரு.

உழுபவர்க்கு நிலம்சொந்தம் சட்டம்வந்தது — அது
புதுச்சேரிவாழ் தலித்துகளுக்கு பொய்த்துவிட்டது
கால்செருப்பாய் சட்டத்தினை கருதியமட்டி — இன்று
கற்சிலையாய் நிற்கும்வெங்கட சுப்பாரெட்டி.

ஐம்பத்தேழில் முதுகளத்தூர் சாதிக்கலவரம் — அது
ஆதிதமிழரை தேவர்சாதி அழித்தபயங்கரம்
திட்டமிட்டு சாதித்தீயை முட்டியபாவி — அந்தத்
தேவரையும் சிலைவடிவில் காண்பதுஅநீதி.



அப்பன்நேரு அரிசனத்தை ஒடுக்கவந்தாரு — மகள்
அப்படியே கிரிசனத்தை மோசஞ்செஞ்சாரு
பிப்ராவை பெல்சியினை மறக்கமுடியுமா — அதன்
பின்புலமாம் இந்திராவுக்கு சிலைஅவசியமா?

சாதிகளை மோதவைத்த சமரசவாதி — தலித்
சனங்கஓட்டை ஏய்த்துபெற்ற சந்தர்ப்பவாதி
பொய்முகத்தை நிஜம்என்று காட்டியநபரு — கல்
பொம்மையாக நிற்கும்அவர் எம்.ஜி.ஆரு.

இந்தியாவை ஆள்வதெல்லாம் இந்தியர்தானாம் — வெள்ளை
எசமானின் சிலைகள்இங்கே இருப்பதுஏனாம்
அடிமைமோகம் ஆள்பவர்க்கு குறையவேஇல்லை —
சிலைகளை
அகற்றுவதே தேசபக்த அடிப்படைவேலை.

செத்தபிணத்தை சிங்காரிக்கும் வேலைநடக்குது
தேர்தல்வந்தா தினம்தினம் பூசைநடக்குது
துரோகியெல்லாம் தியாகியாக்கும் அவலம் தொடருது — இதை
துடைத்தெறிய உழைப்பவர்கள் திரள்வதெப்போது.

ஓட்டுப்பொறுக்க ஆளும்வர்க்கம் வேடம்போடுது — அதுக்கு
ஒவ்வொருசாதி தலைவருக்கும் சிலைநிறுவுது
சாதிவழி உழைப்பவரை பிரித்துநிறுத்துது — இந்தச்
சங்கதிய சனங்கஉணரும் காலம்நெருங்குது.

தேசபக்த தியாகிகளுக்கு சிலைஎழுப்புவோம்— நம்மை
நாசம்செய்த துரோகிகளின் சிலைஅகற்றுவோம்
உழைப்பவர்கள் விடுதலைக்கு உதிரம்சிந்துவோம்
ஒன்றுபட்டு எதிரிகளை வென்றுகாட்டுவோம்.



படிப்பகம்

www.padippakam.com



மார்ச்மாத தொடர்ச்சி

# அரசியல் சட்டமறு ஆய்வு
# ஒரு ஜனநாயக விரோத முயற்சி

கட்சிகளின் அடிப்படையில் இயங்கும் நாடாளுமன்ற ஜனநாயக முறைக்கும், நாடாளுமன்றம் நேரடியாகத் தலைவரைத் தேர்ந்தெடுக்கும் முறை முரண்பட்டது. நாடாளுமன்றமே நேரடியாகத் தலைவரைத் தேர்ந்தெடுக்கும் முறை என்பது ஜனாதிபதி ஆட்சி முறையைப் புகுத்துவதாகும்.

இவ்வித முறை வந்தால், மக்கள்வையில் பெரும்பான்மையை இழந்துவிட்ட அரசாங்கத்திற்கெதிராக நம்பிக்கையில்லா தீர்மானத்தைக் கொண்டுவருவது மிக கஷ்டமாகிப் போய்விடும். இது தவிர, நம்பிக்கையில்லாத் தீர்மானத்தைக் கொண்டுவரவேண்டுமானால் மக்களவையின் 20 சதமான அங்கத்தினர்களின் (தற்சமயமுள்ளதைக் காட்டிலும் இரண்டு மடங்கு) ஆதரவு வேண்டுமென்பதோடு, மாற்று தலைவரும் தேர்ந்தெடுக்கப்பட வேண்டும் என்கிற முன்மொழிவு இந்த அறிக்கையிலுள்ளது.

இது ஒன்றும் தற்செயலாகச் சொல்லப்பட்ட ஒரு ஆலோசனை அல்ல. அறிக்கையிலுள்ள மற்ற முன்மொழிவுகளும் இதை ஊர்ஜிதப்படுத்தப்படுவதாகவே உள்ளன. அமெரிக்காவிலுள்ளதைப் போல தலைமை அறிமுக நாடுகள் நடத்தப்பட வேண்டுமென்ற பரிகாசத்திற்குரிய முன்மொழிவும் இந்த அறிக்கையில் உள்ளது. இதனால் பிரதமர் பதவிக்கு யார் யார் போட்டியிடுவார்கள் என்பதை மக்கள் முன் கூட்டியே தெரிந்துகொள்வார்களாம். இந்த அறிக்கையைத் தயாரித்தவர்களின் மனதில் ஜனாதிபதி முறை பதிந்துள்ளதென்பதைத்தான் இது காட்டுகிறது.

ஜனநாயகத்தில் மக்கள் பங்கு கொள்வதைப் பற்றி மிகுந்த ஐயப்பாடு கொண்டவர்கள்தான் குழுவின் அங்கத்தினர்களாக இருக்கின்றனர். அவர்களின் அறிக்கையில் தொழில்நுட்பம் மிகுந்த எலெக்ட்ரானிக் மீடியா உள்ள இந்தக் காலத்தில் ஊர்வலங்களும்; ஆர்ப்பாட்டங்களும், பொது ஆட்சேபனைகளும் பலன் தராது. மாறாக எலெக்ட்ரானிக் மீடியா மூலமாகக் குறைந்த செலவில் நல்ல பயன்தரதக்க அளவில் ஆட்சேபனைகளை வெளிப்படுத்த முடியும்.. தலைநகரங்களில் ஊர்வலங்கள், ஆட்சேபனை ஆர்ப்பாட்டங்களால் மக்களுக்கு ஏற்படும் அசௌகரியங்களை வெகுவாகக் குறைக்கமுடியும். எனவே ஊர்வலங்கள் மற்றும் ஆர்பாட்டங்கள் நடத்துவதற்காக அரசியல் கட்சிகள் செய்யும் செலவுகளை கட்டுப்படுத்த சட்டம் கொண்டுவர வேண்டும் என்கிற அபத்தமான பரிந்துரைச் செய்துள்ளனர்.

சுதந்திர போராட்ட காலத்தில் மக்கள் அணிதிரண்டு, பெருமளவில் ஆட்சேபனைகளைத் தெரிவிக்காமலிருந்திருந்தால் சுதந்திர இந்தியாவின் அரசியல் சட்டத்தைப்பற்றி விவாதிப்பதற்கான சந்தர்ப்பமே இந்தப் பெரியவர்களுக்கு கிடைத்திருக்காது. அரசியல் கட்சிகள் மக்களை அணிதிரட்டாமல் ஒரு காரியத்தை செய்ய வேண்டுமேயானால், பெரிய வர்த்தகர்கள் நடத்தும் தொலைக்காட்சி அலைவரிசைகளையும், அரசுமீடியாவையும்தான் நம்பியிருக்கவேண்டும். இது மக்களிடையே போகாமலேயே தேர்தலில் வாக்குகளைப் பெறத்தக்க பணபலமும், செல்வாக்குமுள்ள கட்சிகளுக்குத்தான் சாதகமாக இருக்கும். ஆனால், இத்தகைய பரிந்துரையைத்தான் குழு செய்துள்ளது.

ஜனநாயக முறையை பலவீனப் படுத்த ஒன்றன்பின் ஒன்றாக பல முன்மொழிவுகளைக் குழு கொடுத்துள்ளது. எழுதப்படிக்க தெரிந்தவர்களும், அரசியல் சட்டபிரிவுகளைத் தெரிந்துகொள்ள முடிந்தவர்களுமே தேர்தலில் போட்டியிட வேண்டுமென்ற முடிவுக்கு வந்துள்ளது. எனவே எழுத்தறிவில்லாத குடிமக்களை தேர்தல்களில் அனுமதிக்கக் கூடாதென குழு பரிந்துரைத்துள்ளது. மக்கள் படித்து முன்னேறிவிடக்கூடாது என்பதறக்காகவே 40 சதவீத மக்களை இன்னும் எழுதப்படிக்க தெரியாதவர்களாக ஆளும் வர்கம் வைத்துள்ளன. இந்திய அரசு மக்களுக்கு கல்வி கொடுக்கத் தவறியதற்காகப் படிக்காதவர்களைத் தண்டிக்க வேண்டுமா? நல்ல வேலை சொத்துள்ளவர்கள்தான் வாக்களிக்க வேண்டும் என்ற பரிந்துரையைக் குழு செய்யாமல் விட்டு விட்டதற்காக நன்றி சொல்ல வேண்டும்.

ஆளும் வர்க்கங்களைப் பயம் கவ்வியுள்ளது. இந்தப் பயத்தை அரசியல் ஸ்திரமற்ற தன்மை என்கிறார்கள். ஸ்திரமற்ற தன்மையின் வேர்களான முதலாளித்துவ — நிலப்பிரபுத்துவ கொள்கைகளைப்பற்றி பரிசீலிப்பதை விட்டுவிட்டு ஜனநாயகத்தை குறுக்கவும், அரசயலில் பொதுமக்கள் பங்கேற்பதைத் தடுப்பதற்கும் முயற்சிக்கிறார்கள். ஏனெனில் இவற்றை செய்தால்தான் அவர்களின் தாராளமயக் கொள்கைகளை அமலாக்கமுடியும், அந்நிய மூலதனக் காரர்களின் கோரிக்கைகளை ஏற்றுக்கொள்ள முடியும். இதற்கு அவர்களுக்குப் பிடித்தமான வழிமுறை இரு கட்சி ஆட்சிமுறை என்பதாகும். இதை செய்ய அவர்கள் கூறும் ஆலோசனை என்னவென்றால் 10 சதவீத வாக்குகளைப் பெறும் கட்சிகளுக்கே தேசிய அந்தஸ்து கொடுக்க வேண்டும் என்பதாகும். இந்த அளவுகோலின்படி தற்சமயம் பாஜகவும், காங்கிரசும்தான் இத்தகைய அந்தஸ்தை பெற முடியும்.

குழுவின் அறிக்கைகளில் தேர்தல் மற்றும் அரசியல் சீர்த்திருத்தங்கள் பற்றிய முன்மொழிவுகள் பிற்போக்குத் தன்மை கொண்டதாகவும் ஆட்சி பீடத்தில் உள்ளவர்களின் நலன்களை பாதுகாப்பன



படிப்பகம்

www.padippakam.com

ஷ்டீவும் இருக்கின்றன என்பது ஒருபுற மிருக்க. மதவாதம் மற்றும் சாதியத்தால் அரசியல் முறைக்கு ஏற்பட்டிருக்கும் தீமைகள் பற்றிய கருத்துக்கள் அதிர்ச்சி கொடுக்கக்கூடியவைகளாகவும். கேடுகெட்டவையாகவும் உள்ளன. இதில் பா.ஜ.க வின் பங்கு நேரடியாகவே தெரிகிறது. மதவாதத்தின் வளர்ச்சி பற்றிய அறிக்கையில் இவ்விதம் கூறப்பட்டுள்ளது.


அரசியல் சட்டத்தில் மதச் சார்பின்மை ஒரு கொள்கையாக

மதச்சார்பற்றவர் என அழைக்கப் படுபவருக்கும் மதவாதிகளுக்கும் ஏற்பட்டுள்ள மோதல்கள் மற்றும் சச்சரவுகள் தெரியும்.

ஆக (இந்த அறிக்கையின்படி) மதவாதமென்பது போலி மதச்சார்பற்ற தன்மை மற்றும் சிறுபான்மை ஆதரவு என்பதில் போய் முடிந்துள்ளது. மதவாத அச்சுறுத்தல் என்பது மதச்சார்பற்றவர் என அழைக்கப்படுபவர்களுக்கும் மதவாதி க்குக்குமிடையேயான மோதல்களும்

மோதல்களும் சச்சரவுகளும்தான்.சாதியத்தின் வளர்ச்சி பற்றி இவ்வித கண்டுபிடிப்பு கூறப்பட்டுள்ளது.

சாதி உணர்ச்சிகள் அரசியல் ஆதாயத்திற்காகப் பயன்படுத்தி ஒரு சாதியினரை மற்றொரு சாதியினருக்குப் பாதகமாக செயல்படுத்துவதானது குருட்டு மதவெறியைக் காட்டிலும் மோசமானது. பகுத்தறிவுடமைக்கு எதிரானது. ஆனால். சாதிவெறி என்ற அரக்கன் கீழ்நிலையிலிருக்கும் இந்திய மக்களின்



...மந்திருந்தாலும் மதவாதக் கட்சிகள் ஒன்றுக்கொன்று போட்டிப்போட்டுக் கொள்வதை அரசியல் சட்டம் அனுமதிக்கிறது. இந்திய அரசியலில் மதவாதமும். அடிப்படைவாதமும் நாளுக்குநாள் அதிகரித்துவரும் போக்கே நிலவுகிறது. மதச்சார்பற்ற சமுதாயத்தில் அத்தியாவசியமாக இருக்கவேண்டிய சகிப்புத்தன்மை மறைந்து போய்விட்டதாக தெரிகிறது. தேர்தல் அரசியலுக்காகவும் வாக்கு வங்கிகளுக்காகவும் ஒவ்வொரு அரசியல் கட்சியும் மறைமுகமாக மதவாதத்தை பயன்படுத்தி வருவதால் மதசார்பற்றத் தன்மைக்கு கல்லறை கட்டப்பட்டு அதன்மேல் போலி மதசார்பற்ற தன்மை அல்லது சிறுபான்மை ஆதரவு என்ற வாசகம் எழுதப்பட்டுவிட்டது. கடந்த பத்தாண்டுகளில் தேசிய மற்றும் மாநில அரசியல் இயக்கத்தைப் பார்த்தால்.

சச்சரவுகளும் தவிர வேறொன்றுமில்லையாம். இத்தகைய ஆராய்வை பா.ஜ.க – ஆர்.எஸ்.எஸ் – ன் ஆர்கனைசர் பத்திரிகை யில்தான் பார்க்க முடியும். ஆர்.எஸ்.எஸ். பிரச்சாரகர் ஒவ்வொருவருக்கும் இதே அபிப்பிராயத்தைதான் சொல்லுவார்கள்.

கடந்த பத்தாண்டுகளில்மதவாதம் வளர்ந்துள்ளதென்பதைதான் அனுபவம் காட்டுகிறது. மற்ற விஷயங்கள் அரசியல் அணி திரட்டுவதற்காக அப்பட்டமாக பயன்படுத்தப்பட்டன.

அத்வானி நடத்திய ரத யாத்திரை. பாபர் மசூதியை இடித்த வெறுக்கத்தக்க செயல்பாடு குற்ற நோக்கங்களுக்காக மதத்தை பயன்படுத்தியது. சிறுபான்மையினர் மீது தொடர்ந்து அதிகரித்து வரும் தாக்குதல்கள். இவையெல்லாம் மதச் சார்பற்றவர்கள் என்று செயல்படுவர்களுக்கும் மதவாதிகளுக்குமிடையே ஏற்பட்ட

உரிமைக்காவலனாக யாருக்கும் புரியாத வகையில் திடீரென வளர்ந்துவிட்டான்.

**சிறுபான்மையினருக்கு விரோதமான நிலைபாடு**

கீழ்ச் சாதியினர் தங்களின் உரிமைகளுக்காகப் போராடுவது மதவாதத்தைவிட அதிகமான தீங்குகளை விளைவிக்குமாம் அதே நிலைப் பாட்டைதான் மண்டல் அறிக்கை ஏற்றுக் கொள்ளப்பட்ட சமயத்தில் கிளப்பப்பட்ட எதிர்ப்புகள் சமயத்தில் இந்து மதவாதிகள் எடுத்த நிலைப்பாடாகும்.

சிறுபான்மையினருக்கு அரசு உத்தியோகங்கள். காவல்துறை மற்றும் துணை ராணுவப்படையில் நியாயமான பிரதிநிதித்துவம் கொடுக்கப் பட வேண்டுமென கேட்கும் அரசியல் வாதிகளை சாடுகின்ற அகங்காரத் துணிச்சல் இந்த அறிக்கையிலுள்ளது.



படிப்பகம்

www.padippakam.com

பல புத்தகங்களும் கட்டுரைகளும் இதற்கு எடுத்துக்காட்டாக கூறப்பட்டுள்ளது. ஆனால் மேற்படிப்பில் 4 சதவீத முஸ்லிம்கள்கூட இல்லையென்பதும் நிர்வாகப் பதவிகளில் இவர்களின் பிரதிநித்துவம் மிக்குறைவாக இருக்கின்றது என்பது இந்த அறிக்கையை எழுதியவர் களுக்கு தெரியாமல் போய்விட்டது. மறுபரிசீலனை குழுவால் நியமிக்கப்பட்ட அநாமயதேயக் குழுக்கள் (அங்கத்தினர்களின் பெயர்கள் வெளியிடப்படவில்லை) ஏதோ அறிவார்ந்த முயற்சிகளை செய்து இந்த அறிக்கைகளை வெளியிட்டதாக சொல்லிக் கொள்கிறார்கள்.

ஆனால் இவற்றில் ஆர்.எஸ்.எஸ் பா.ஜ.க வின் ஒருதலைப் பட்சமான கருத்துக்கள் அப்படியே பிரதிபலிக்கின்றன.

அரசியல் சட்டத்தை சீர்த்ருத்த ஒரு உண்மையான முயற்சி எடுக்கப்படும் என்ற நம்பிக்கையில் சில நல்லெண்ணம் கொண்ட சட்ட வல்லுனர்களும் நிபுணர்களும் இந்தக் குழுவிற்கு உதவ சம்மதித்தார்கள்.

இந்த மறு பரிசீலனைக்குழுவை நியாயப்படுத்தும் எந்த நடவடிக்கையிலும் ஈடுபடக்கூடாதென நாம் ஆரம்பத்திலேயே எச்சரித்தோம். இது ஆர்.எஸ்.எஸ் பா.ஜ.க முகாமிலுள்ள சுபாஷ்கஷ்ராய் போன்ற வர்களும், இடது முன்னணியின் தலைமையில் இயங்கும் மேற்கு வங்க அரசாங்கத்தைக் கலைத்துவிட்டு அங்கு ராணுவத்தை அனுப்பவேண்டும் என்றுக் கூறிய ஸ்டேட்ஸ்மேன் பத்திரிகையின் ஆசிரியரான சி. ஆர் ஈரானி போன்றவர்களும் இருக்கும் கூடாரமாக இருக்கட்டும்.

மேல் தட்டு மக்களின் அரசியலுடன் மதவெறி பிடித்த வெறுப்புணர்ச்சி மிக்க மோசமான சேர்க்கையாக மறுபரிசீலனை குழுவின் மனப்பான்மை உள்ளது.

இந்த அறிக்கைகளின் மூலம் மறுபரிசீலனைக் குழுவின் அந்தரங்க செயல்பாடுகள் அனைவருக்கும் தெரியும் வகையில் வெளிவந்துவிட்டன என்பது ஒரு வகையில் நல்லது. ஏனெனில், வாஜ்பாய் அரசின் பராமரிப்பில் செயல்படும் இந்த மறுபரிசீலனைக்குழுவால் நன்மை பயக்குமென்ற மாயை கொண்டவர்கள் மீண்டும் சிந்திக்கவே செய்வார்கள்.

–தமிழாக்கம் எஸ்.எம். குத்புதீன்
–நன்றி தீக்கதிர்

## தாமதமாக வழங்கப்படும் நீதி மறுக்கப்படும் நீதியே

இந்தியாவில் உள்ள உயர்நீதிமன்றங்களில் 1998 ம் வருடத்தில் தாக்கல் செய்யப்பட்ட மொத்த வழக்குகள் 15 லட்சம். அந்த ஆண்டில் முடிக்கப்பட்ட வழக்குகள் 13 லட்சம் மட்டுமே. உயர் நீதிமன்றங்களுக்கென அனுமதிக்கப்பட்ட நீதிபதிகளின் மொத்த எண்ணிக்கை 608. ஆனால் எந்த ஒரு நேரத்திலும் இதில் 25 சதவிகித பதவிகள் காலியாக உள்ளன. இந்த பதவிகள் நிரப்பப்பட்டாலே ஒரு வருடத்தில் தாக்கல் செய்யப்படும் வழக்குகளின் அதே எண்ணிக்கையில் வழக்குகளை முடிக்கமுடியுமென அரசு ஊழியர்கள் நிர்வாக நடுவர் மன்ற அலுவலகக் கட்டிடத் திறப்புவிழாவில் பேசிய உச்சநீதிமன்ற தலைமை நீதிபதி கூறியுள்ளார்.

அதே விழாவில் பேசிய மத்திய சட்ட அமைச்சர் உயர்நீதிமன்றங்களில் 33 லட்ச வழக்குகளும், மற்ற நீதிமன்றங்களில் 2 கோடி வழக்குகளும் தேக்கத்திலிருப்பதாகக் கூறியுள்ளார். ( இந்து ஆகஸ்ட் 5 ) இவ்விழாக்களில் தேக்கத்திலுள்ள வழக்குகளின் எண்ணிக்கைகளைக்கூறி அவற்றை விரைவில் முடிப்பதற்கான பரிகாரங்களை உயர் மட்ட நீதிபதிகள் கூறுவதும், அந்த விழாக்களில் பங்கேற்கும் மத்திய-மாநில அரசுகளின் அமைச்சர்கள் அதற்கு ஆமாம் சாமி போடுவதும் புதிதல்ல. சில ஆண்டு காலமாக இது நடந்தே வருகிறது. உயர் நீதிமன்றத்தில் ஒரு வழக்கை தாக்கல் செய்யவரும் கட்சிகாரர்களிடம் வழக்கறிஞர்களே வழக்கு முடிய 3 ஆண்டு காலமாகுமென சமீப காலத்தில் எச்சரித்தும் வருகிறார்கள். ஆனால் வழக்குகளின் எண்ணிக்கையும் குறையவில்லை, நிலுவையும் குறையவில்லை.

இவை ஒருபுறமிருக்க, உயர்நீதிமன்ற நீதிபதிகளின் அனுமதிக்கப்பட்ட எண்ணிக்கையில் 25 சதவிகிதம் எப்போதும் காலியாக இருக்கிறதென உச்சநீதிமன்ற தலைமை நீதிபதி கூறியுள்ளார். இதற்கு என்ன காரணம்? புதிய நீதிபதிகளை நியிமிப்பதில் அந்தந்த மாநில முதலமைச்சர்களுக்கும், உயர் நீதிமன்ற நீதிபதிகளுக்கும் எழுகின்ற கருத்து வித்தியாசங்களே. ஆளுங்கட்சிக்கு ஆதரவான வழக்கறிஞர்களையே உயர்நீதிமன்ற நீதிபதிகளாக நியமிக்க வேண்டுமென முதலமைச்சர்கள் விரும்புவதால்தான் பெரும்பாலும் இந்த கருத்து வேற்றுமைகள் எழுகின்றன.விருப்புவெறுப்பின்றி, தகுதியின் அடிப்படையில் உயர்நீதிமன்ற நீதிபதி பதவிக்கு பொருத்தமான மாவட்ட நீதிபதிகள் மற்றும் வழக்கறிஞர்களை நியமிக்கும் ஒரு ஏற்பாடு (குழு) இருந்தால் காலியிடங்களின் எண்ணிக்கை 5 சதவிகிதத்தைக் கூட தாண்டாது. உச்ச நீதிமன்றம் தலைமை நீதிபதி கூறுவதுபோல ஒரு வருடத்தில் பதியப்படும் வழக்குகளின் எண்ணிக்கை அளவில் வழக்குகள் தீர்க்கப்படும். பொதுமக்கள் நீதிக்காக தவிக்க வேண்டியதில்லை. நாட்டிலுள்ள அனைத்து நீதிமன்றங்களிலுமுள்ள வழக்குகளில் அதிக எண்ணிக்கையில் சம்மந்தப்பட்டிருப்பது அரசு(மத்திய மானில அரசுகள்) தான். ஆனால் வழக்குகளை விரைவில் முடிக்க விடாமல் தடுப்பதும் அரசுதான்.

எனவே இந்தநீதிமன்ற நீதிபதிகளை நியமனம் செய்வதற்கு ஒரு உயர் மட்டக் குழுவை அமைத்தும், தேவையற்ற வழக்குகளை தாக்கல் செய்வதைத் தவிர்த்தும் அரசு செயல்பட்டால் தாமதம் குறையும். பொதுமக்களின் தவிப்பும் குறையும்.



படிப்பகம்

www.padippakam.com

தேர்தல் பார்வை

# எங்கிருந்தாலும் ஒழிக!..



பழிவாங்கப்படும் பரிதி

தமிழக சட்ட மன்றத்திற்கு 12 வது முறையாக நடந்த தேர்தலில் யார் கோட்டையைப் பிடிப்பது என்பதில் அரசியல் கட்சிளுக்கிடையில் பலத்த போட்டி இருந்த நிலையில் புதிது புதிதாக முளைத்த சாதிக் கட்சிகளின் ஆதிக்கமே மேலோங்கி இருந்தது. வருகின்ற ஆட்சி சாதிக் கட்சிகளின் பிடியில்தான் தவழ போகின்றது என்ற மாயஜாலங்கள் ஊடகங்கள் மூலம் உருவாக்கப்பட்டன.

எனவே தி.மு.க. மற்றும் அ.தி.மு.க தலைமையிலான கூட்டணிகள் போட்டி போட்டுக்கொண்டு சாதிக் கட்சிகளைத் தங்களுடைய அணிகளில் சேர்க்க மும்முரமாக களமிரங்கின.

பகல் பொழுதுவரை கலைஞருடைய ஆட்சி தமிழகத்தில் பொற்காலமான ஆட்சி. மீண்டும் இந்த ஆட்சியே அரியணையில் அமரவேண்டும் என துதி பாடிக்கொண்டிருந்த பா.ம.க என்ற சாதிக் கட்சி அதேநாள் இரவுப் பொழுதில் தன்னுடைய இரண்டாவது நாக்கை வெளியே நீட்டி அன்பு சகோதரி ஜெயலலிதாதான் அடுத்த முதல்வர், அந்தச் சகோதரியின் வழியிலே நடப்போம் என அந்தர் பல்டி அடித்து தமிழக அரசியலில் பரபரப்பை உண்டாக்கி கூட்டணிக் கூத்திற்கு பிள்ளையார் சுழி போட்டது.

கடந்த நாடாளுமன்ற தேர்தலில் தேசிய ஜனநாயக கூட்டணில் அங்கம் வகித்த பா.ம.க ,தி.மு.க கூட்டணியிலிருந்து தானாகவே கழட்டிக் கொண்டு ஜெ.கூட்டணிக்கு மாறியதிலிருந்தே தேர்தல் கூட்டணியும், அதில் பேரமும் நடைபெற துவங்கின.

அ.தி.மு.க கூட்டணியில் த.மா.க சைக்கிளில் வலம் வந்துக் கொண்டிருந்த ஒரு சில தலித் கட்சிகள் இஞ்சி தின்ண குரங்கைப்போல மாட்டிக் கொண்டு உதய சூரியனில் தாவின!

அ.தி.மு.க தல்மையிலான காங்கிரஸ், தமிழ் மாநில காங்கிரஸ், பா.ம.க, இந்திய கம்யூனிஸ்ட், மார்க்சிஸ்ட் போன்ற கட்சிகள் லத்திப் தலமையிலான முஸ்லிம் லீக் கட்சியையும் உடன் வைத்துக்கொண்டு மதசார்பற்ற கூட்டணி என்ற பெயரில் தி.மு.க கூட்டணியை விட முன்னதாகவே தேர்தல் வியூகத்தை துவக்கி கூட்டணி அமைப்பதில் முதலிடத்தைப் பெற்றது. இந்தக் கூட்டணி தமிழகத்தில் தலித்துகளுக்கு எதிராக செயல்பட்டுக் கொண்டிருக்கும் பா.ம.க வை உடன் வைத்துக்கொண்டு தேர்தல் களத்தில் நின்றது.

மற்றொரு பெரிய கூட்டணியான தி.முக தலைமையிலான கூட்டணி சற்று தாமதமாகவே தேர்தல் களத்தில் இறங்கியது. அடிப்படையில் எப்பொழுதும் தலித்துகளுக்கெதிரான பா.ஜ.க.வை தன்னுடன் கூட்டுச்சேர்த்துக்கொண்டது தி.மு.க. வருகின்ற தேர்தலில் மக்களைச் சாதி வாரியாக கூறுபோட்டு அதன் மூலம் சட்ட மன்றத்தைக் கைப்பற்றி பதவி சுகத்தை அடைய நினைத்த தி.மு.க பல்வேறு காலகட்டங்களில் தலித் மக்ளுக்கெதிராக கலவரத்தை ஏற்படுத்திய முதலியார்களின் புதிய நீதிக்கட்சி, யாதவர்களின் மக்கள் தமிழ்தேசம், தேவர்களின் மூவேந்தர் முன்னேற்றக்கழகம், கொங்கு வேளாளர் கட்சி ஆகிய சாதிக் கட்சிகளை தன்னுடைய கூட்டணி சிறகுகளுக்குள் அடக்கிக் கொண்டது.

பொன்னூரில் தலித் மக்களுக்கெதிராக கலவரத்தை ஏற்படுத்தியது முதலியார்கள்தான் என்பதையும், தென் மாவட்டங்களில் தேவர்கள் தலித்துகளை வெட்டிச் சாய்த்ததையும் மறந்துவிட்டு ஒரு சில தலித் கட்சிகள் எதிரிகளோடு கைகோர்த்து நின்றன. ஒரே உறையில் இரண்டு வாள் எப்படி இருக்க முடியும்?

கொஞ்ச நாட்களாக தாய்வீட்டிலிருந்த ம.தி.மு.க, கூட்டணியில் குறைவான தொகுதி ஒதுக்கியதாலும் தி.மு.கவின் குடும்ப அரசியல் வை.கோ -வால் முடிவுப் பெறும் என்று கருணாநிதி பயந்ததாலும் தாய் வீட்டிலிருந்து வலுக்கட்டாயமாக வெளியேற நிர்பந்திக்கப்பட்டார் வை.கோ. அதனால் ம.தி.முக தன்னந்தனியே தேர்தலை சந்தித்தது.

தேர்தல் அறிக்கையை வெளியிடுவதிலும் முதன்மை இடத்தை பிடித்த அ.தி.மு.க இட ஒதுக்கீட்டிற்கு பாதுகாப்பு, பஞ்சமி நிலங்களை மீட்டுத்தருதல், தலித் கிறுஸ்தவர்களை எஸ்.சி பட்டியலில் சேர்ப்பது போன்றவைகளை தேர்தல் அறிக்கையில் குறிப்பிட்டு தலித் ஓட்டுக்களை குறிவைத்தது. பஞ்சமி நிலப்போராட்டம் சென்ற ஜெயலலிதா ஆட்சியில்தான் அடக்கி ஒடுக்கியதை கவனத்தில் கொள்ளவேண்டும்.

1969 முதல் 1971 வரையில் தலித் சமுதாயத்திற்கு கான்கிரிட் வீடுகளைக் கட்டியதையும், இட ஒதுக்கீட்டில் 16 சதவீதத்திலிருந்து 18 சதவீதமாக உயர்த்தியதையும், 1971 முதல் 1976 வரையில் தாழ்த்தப்பட்டவர்களுக்கு இலவசக் கல்விக் கொடுத்ததாகவும் 1996 முதல் 2001 வரை அம்பேத்கர் சட்டப் பல்கலைக்கழகம், அம்பேத்கர் மணிமண்டபம், சமத்துவ புரம் ஆகியவைகளை தங்களுடைய ஆட்சியில்தான் செய்யப்பட்டதாகக் கூறி தலித் ஓட்டுக்களை வேட்டையாட துடித்துது தி.மு.க.

வழக்கம்போலவே எல்லா அரசியல் கட்சிகளும் தலித்துகள் போட்டியிட தனித்

தேர்தல் கலவரத்தில் கொளுத்தப்பட்ட குடிசைகள்





படிப்பகம்

www.padippakam.com

## தனித் தொகுதியில் வெற்றிபெற்ற சட்ட மன்ற உறுப்பினர்கள்

| வ.எண் | சட்டமன்ற உறுப்பினர் | சார்ந்த கட்சி | பெற்ற ஓட்டு | தொகுதி | மாவட்டம் |
|---|---|---|---|---|---|
| 01 | கே. மகேந்திரன் | இ.கம்யூ | 69,613 | பெரம்பூர் | சென்னை |
| 02 | பரிதி இளம்வழுதி | தி.மு.க | 33,189 | எழும்பூர் | சென்னை |
| 03 | எஸ். கனிதா சம்பத் | அ.தி.மு.க | 74,712 | திருப்போரூர் | காஞ்சிபுரம் |
| 04 | ஏ. செல்வராஜ் | பா.ம.க | 54,114 | அச்சிரப்பாக்கம் | காஞ்சிபுரம் |
| 05 | டி. யசோதா | காங்கிரஸ் | 70,655 | ஸ்ரீபெரும்புதூர் | திருவள்ளூர் |
| 06 | கே.பவானி கருணாகரன் | அ.தி.மு.க | 67,034 | அரக்கோணம் | வேலூர் |
| 07 | சி. கனகதாரா | அ.தி.முக | 65,366 | பேரணாம்பட்டு | வேலூர் |
| 08 | போளூர்வரதன் | காங்கிரஸ் | 54,145 | செங்கம் | திருவண்ணாமலை |
| 09 | கே. முருகவேல்ராஜன் | பா.ம.க | 55,773 | வந்தவாசி | திருவண்ணாமலை |
| 10 | என். கணபதி | அ.தி.மு.க | 68,421 | வானூர் | விழுப்புரம் |
| 11 | வி. சுப்பிரமணியன் | அ.தி.மு.க | 67,574 | கண்டமங்கலம் | விழுப்புரம் |
| 12 | என். இராமு | அ.தி.மு.க | 73,384 | உளுந்தூர்பேட்டை | விழுப்புரம் |
| 13 | பி. வள்ளல்பெருமான் | தி.மு.க | 55,444 | காட்டுமன்னார்கோயில் | கடலூர் |
| 14 | இரா. திருமாவளவன் | தி.மு.க | 64,627 | மங்களூர் | கடலூர் |
| 15 | வி. கிருஷ்ணமூர்த்தி | வ. கம்யூ | 70,443 | அரூர் | தர்மபுரி |
| 16 | கே. ஜெயக்குமார் | காங்கிரஸ் | 67,215 | நாமக்கல் | நாமக்கல் |
| 17 | எஸ். மகாலிங்கம் | அ.தி.மு.க | 59,571 | அவினாசி | கோவை |
| 18 | கோவை தங்கம் | தா.ம.க | 47,428 | வால்பாறை | கோவை |
| 19 | வி. சிவகாமி | பா.ம.க | 56,835 | தாராபுரம் | ஈரோடு |
| 20 | ஆர். கிருஷ்ணன் | பா.ம.க | 53,436 | அந்தியூர் | ஈரோடு |
| 21 | ஏ. அருணாச்சலம் | அ.தி.மு.க | 61064 | வரகூர் | பெரம்பலூர் |
| 22 | கே. கந்தசாமி | தா.ம.க | 53,156 | குன்னூர் | நீலகிரி |
| 23 | எம். சின்னசாமி | அ.தி.மு.க | 63,611 | பழனி | திண்டுக்கல் |
| 24 | ஜே. அன்பழகன் | அ.தி.மு.க | 60,972 | நிலக்கோட்டை | திண்டுக்கல் |
| 25 | பி. பொன்னம்பலம் | அ.தி.மு.க | 97,060 | சமயநல்லூர் | மதுரை |
| 26 | ஆர். சசிகலா | அ.தி.மு.க | 64,046 | கிருஷ்ணராயபுரம் | கரூர் |
| 27 | பி. சரோஜா | அ.தி.மு.க | 58,810 | உப்பிலியாபுரம் | திருச்சி |
| 28 | பி. இராஜரத்தினம் | அ.தி.மு.க | 67,074 | பெரம்பலூர் | பெரம்பலூர் |
| 29 | என். சந்திரமோகன் | அ.தி.மு.க | 52,759 | சீர்காழி | நாகப்பட்டினம் |
| 30 | கே. தமிழரசன் | தா.ம.க | 52,430 | நன்னிலம் | திருவாரூர் |
| 31 | ஏ. அசோகன் | தி.மு.க | 58,425 | திருவாரூர் | திருவாரூர் |
| 32 | ஜி. பழனிச்சாமி | சி.பி.ஐ | 73,451 | திருத்துறைப்பூண்டி | திருவாரூர் |
| 33 | பூபதி மாரியப்பன் | அ.தி.மு.க | 54,677 | வலங்கைமான் | தஞ்சை |
| 34 | ஏ. கருப்பாயி | அ.தி.மு.க | 80,855 | கொளத்தூர் | புதுக்கோட்டை |
| 35 | கே.பாரமலை | த.மா.க | 56,508 | மானாமதுரை | சிவகங்கை |
| 36 | ஆர். ராம்பிரபு | த.மா.க | 53,746 | பரமக்குடி | இராமநாதபுரம் |
| 37 | எம். ராஜசேகர் | அ.தி.மு.க | 61,740 | ராஜபாளையம் | விருதுநகர் |
| 38 | ஏ. சிவபெருமாள் | அ.தி.மு.க | 39,350 | ஓட்டப்பிடாரம் | தூத்துக்குடி |
| 39 | சி. கருப்பசாமி | அ.தி.மு.க | 52,000 | சங்கரன்கோயில் | திருநெல்வேலி |
| 40 | ஆர். சஸ்வரன் | த.மா.க | 48,019 | வாசுதேவநல்லூர் | திருநெல்வேலி |
| 41 | ஏ.எஸ் கண்ணன் | இ.கம்யூ. | 81,408 | பொன்னேரி | திருவள்ளூர் |
| 42 | இளையக்கண்ணு | அ.தி.முக | 64,319 | ஏற்காடு | சேலம் |
| 43 | அழகம்மாள் | அ.தி.மு.க | 67,682 | தலைவாசல் | சேலம் |
| 44 | கலாவதி | அ.தி.மு.க | 61,312 | சேந்தமங்கலம் | நாமக்கல் |
| 45 | தனபால் | அ.தி.மு.க | 70,312 | சங்ககிரி | நாமக்கல் |
| | | பாண்டிச்சேரி | | | |
| 1 | என். கங்காதரன் | காங்கிரஸ் | 3,723 | ஏம்பலம் | பாண்டி |
| 2 | பி.ராஜவேலு | பு.ம.கா | 7,696 | பாகூர் | பாண்டி |
| 3 | பி.அங்காளன் | காங்கிரஸ் | 4,752 | திருபுவனை | பாண்டி |
| 4 | ஏ. ஏழுமலை | பு.ம.கா | 5,364 | ஊசுடு | பாண்டி |
| 5 | எம். சந்திரராசு | காங்கிரஸ் | 5,720 | நெடுங்காடு | பாண்டி |

படிப்பகம்

www.padippakam.com



தமிழக முதல்வர் முதல் கோப்பில் கையொப்பமிடுகிறார்

தொகுதியில் மட்டுமே வாய்ப்பளித்தனர். இவற்றில் விதிவிலக்காக கோவை மேற்கு பொதுதொகுதியில் சி.டி தண்டபாணி என்ற தலித்திற்கு தி.மு.க வும், செங்கல்பட்டு பொதுத் தொகுதியில் இ. சத்தியாவிற்கு ம.தி.மு.க வும், திருச்சி நாடாளுமன்றத் தொகுதியில் தலித் எழில்மலைக்கு அ.தி.மு.க வும் வாய்ப்புக் கொடுத்து தேர்தலில் நிற்க வைத்தனர்.

தேர்தல் நாள் 10.05.2001 அன்று நகர் புறங்களைக் காட்டிலும் கிராமப்புறங்களில் வாக்களிப்பு நிகழ்ச்சி விறுவிறுப்பாக நடக்கத் தொடங்கியது. அநேக இடங்களில் சாதி இந்துக்கள் தூண்டிய கலவரங்களால் தலித்துகள் வாக்களிக்க விடாமல் தடுக்கப்பட்டனர். இன்னும் வேறு இடங்களில் தலித் மக்களுடைய ஓட்டுக்கள் அவர்கள் வாக்களிப்பதற்கு முன்னதாகவே வாக்களிக்கப்பட்டு இருந்ததால் தலித் மக்கள் பலர் ஏமாற்றத்துடன் வீடு திரும்பியதையும் காணமுடிந்தது.

தலித்துகள் தாக்கப்பட்டனர். தோற்றுவிடுவோம் என நினைத்த வேட்பாளர்களெல்லாம் தங்களுடைய தொகுதியில் தேர்தலை நிறுத்த வேண்டுமென்பதற்காகக் கலவரத்தை தூண்டிவிட்டனர். இந்தக் கலவரங்கள் முழுவதும் தலித்துகள் பகுதியிலேயே நடத்தப்பட்டன. இந்நிகழ்ச்சிகளை பத்திரிகைகளும் செய்தி ஊடகங்களும் முடிந்தவரையில் மூடிமறைக்க முற்பட்டன.

தேர்தல் கலவரத்தின் உச்சக் கட்டமாக சென்னை எழும்பூர் தனித் தொகுதியில் அ.தி.மு.க கூட்டணி சார்பாக ஜான்பாண்டியனும் தி.மு.க சார்பாக முன்னாள் துணை சபாநாயகர் பரிதிஇளம்வழுதியும் களத்தில் நின்றனர். இந்தத் தொகுதியில் ஜான்பாண்டியன் தரப்பினர்பரிதி இளம்வழுதி ஆதரவாளர்கள் இடையே கலவவரம் மூள ஜான்பாண்டியனும் அவரது ஆதரவாளர்கள் 47 பேரும் கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டனர். ஆட்சி மாறியதும் பரிதிஇளம்வழுதி மீதும் வழக்கு பதிவு செய்து சிறையில் அடைத்தது காவல் துறை. இதில் இருவரும் தலித் என்பது குறிப்பிடத்தக்கது.

அதே தினத்தில் ஆரனி தொகுதியில் புதிய நீதிக்கட்சியின் தலைவர் ஏ.சி சண்முகம் தேர்தலில் நின்றார். அந்தத் தொகுதியில் உள்ள அரையாளம் கிராமத்தில் முதலியார்கள் ஏ.சி சண்முகத்தின் தூண்டுதலோடு தலித்துகள் மீது கொலை வெறித் தாக்குதல்கள் நடத்தினர். தலித் மக்களும் காவல் துறையில் புகார் கொடுத்தனர். ஆனால் இதுவரையில் ஏ.சி சண்முகமோ அவரைச் சார்ந்தவர்களோ கைது செய்யப்படவில்லை.

எழும்பூரில் தலித்துகளைக் கைது செய்த காவல் துறை ஆரணியில் ஏ.சி.எஸ் முதலியார் வகையறாக்களை கைது செய்யாமல் விட்டுவிட்டது. இது அப்பட்டமான ஒரு சாதி வெளிப்பாடுதானே. கடந்த நாடாளுமன்ற தேர்தலில் சிதம்பரம் தனித் தொகுதியில் தலித் கட்சியைச் சார்ந்த திருமாவளவனும், பா.ம.க வில் பொன்னுசாமி என்ற தலித்தும் தேர்தல் களத்தில் மோதினார்கள். இதில் பொன்னுசாமி வெற்றிப்பெற்றார். அவர் வெற்றிப்பெற்றது செல்லாது என அறிவிக்கச் சொல்லி அதே தலித் கட்சியைச் சேர்ந்த வேட்பாளர் ஒரு புகாரை கிளப்பினார்.

இதேபோல் 10.05.2001 அன்று நடைபெற்ற பாண்டிச்சேரி சட்டமன்ற தேர்தலில் ஏம்பலம் தனித் தொகுதியில் காங்கிரஸ் கட்சி வேட்பாளர் கங்காதரனும், தலித் கட்சியை சார்ந்த சு, பழனிவேலு என்பவரும் களம் நின்றனர். இதில் காங்கிரஸ் கட்சியைச் சார்ந்தவர் வெற்றிபெற்றார். வெற்றிபெற்றவர் மதம் மாறிய கிறுஸ்தவர் எனக் கூறி அவரது பதவியை ரத்து செய்து கிரிமினல் வழக்கு தொடர ஆளுநரிடம் மனு கொடுத்துள்ளார் தலித் கட்சியைச்(திருமாவளவன்) சார்ந்த பழனிவேலு. தலித்துகள் மீது தலித்துகளே புகார் கொடுப்பதற்கும், வழக்கு தொடர்வதற்கும் தலித்துக்களைக் கூறுபோடுவதற்கும், அவர்களுக்குள் பகையை வளர்த்துக்கொள்வதற்கும் திட்மிட்டே உருவாக்கப்பட்டுள்ளது இத்தேர்தல்முறை!

இப்படி தலித்துக்களை தேர்தல் முறையின் மூலம் சிதைக்கும் ஒரு சூழ்நிலை உருவாக்கியிருப்பது சாதி இந்துககளின் சூழ்ச்சியே. வட மாவட்டங்களில் வன்னியர்களும், தென்மாமாவட்டங்களில் தேவர்களும் ஒற்றுமையாக இருக்கின்றார்கள். ஆனால் தலித்துக்ளோ பிரிந்துக் கிடக்கிறார்கள். இனி அவர்களை ஒன்றிணைக்க முடியாது என்ற ஒரு மாயையை திட்மிட்டே உருவாக்கப்பட்டுள்ளது.

தலித் உட்சாதிகள் ஒன்றிணையக்கூடாது என்பதில் அரசியல் கட்சிகளும் அதைச்சார்ந்த சாதி அமைப்புகளும் தெளிவாக் இருக்கின்றன. இதற்கு உதாரணமாக நடந்து முடிந்த சட்ட மன்ற தேர்தலில் வட தமிழகத்திலுள்ள வந்தவாசி தனித் தொகுதியில் தாழ்த்தப்பட்ட பறையர் மற்றும் சக்கிலியர் இன மக்கள் வாழ்ந்தபோதும் தென் மாவட்டத்திலிருந்து தாழ்த்தப்பட்ட பள்ளர் இனத்தைச் சார்ந்த முருகவேல்ராசன் என்ற வேட்பாளரை வந்தவாசி தொகுதி சட்டமன்ற உறுப்பினராக்கியுள்ளது பாட்டாளி மக்கள் கட்சி. இந்த செயல் தலித் உட்பிரிவுகளுக்குள் ஒரு வெறுப்பையும், மோதலையும் உருவாக்கியுள்ளது. தலித் மக்கள்



சட்பேரவை அமர்வு



படிப்பகம்

www.padippakam.com

தங்களுக்குள் மோதிக்கொள்ள வேண்டும் என்பதுதான் சாதி அமைப்புகளுடைய இலட்சியம். இதையே தேர்தல்கள் மூலம் சாதிக்கின்றன.

தேர்தல் நாள் தலித்துகளுக்கு எதிரானதாகவே இருந்துவந்தது என்பதற்கு இதைவிட வேறு சாட்சி இருக்க முடியாது.

வாக்கு எண்ணிக்கை நாளான 13 ந்தேதி தொடக்கம் முதலே அ.தி.மு.க கூட்டணி முன்னணியில் இருந்துவந்தது. தேர்தல் இறுதி நிலவரத்திலும் அ.தி.மு.க பெரும்பாண்மைப் பெற்று ஆட்சியை கைப்பற்றியது. ஆளும் தி.மு.க கூட்டணியோ படுதோல்வி அடைந்து பதவியை ராஜினாமா செய்தது.

தோல்வியுற்றுப் பலரும் பலவிதமாகக் கருத்துக்களைச் சொல்ல தி.மு.க கூட்டணியில் இருந்த தலித் கட்சியைச் சார்ந்த டாக்டர் கிருஷ்ணசாமியோ. தி.மு.க கூட்டணியில் தலித் கட்சிகள் இருந்ததால்தான் தலித் அல்லாதவர்கள் ஓட்டுப்போடவில்லை என தனதுக் கருத்தை கூறினார். அதே நேரத்தில் திருச்சி நாடாளுமன்ற பொதுத்தொகுதியில் அ.தி.மு.க சார்பில் போட்டியிட்ட தலித்எழில்மலை பல ஆயிரம் வாக்குகள் வித்தியசத்தில் வெற்றிப் பெற்றார் என்பது குறிப்பிடத்தக்கது. டாக்டர் கிருஷ்ணசாமியின் வாதத்தின்படி பார்த்தால் தலித் எழில்மலை திருச்சி நாடாளுமன்ற



நொறுக்கப்பட்ட பரிதியின் கார்

தேர்தலில் வெற்றிப்பெற்றிருக்க வாய்ப்பேயில்லை.

நாம் தேர்தல் முடிவுகளை ஆய்ந்து உற்று நோக்குவோம் என்றால் தலித் வாக்குகள்தான் பல வேட்பாளர்களை வெற்றிப்பெற செய்து சட்ட மன்றத்திற்கு அனுப்பியுள்ளது. சாதி சங்கங்களின் பிடியில் சிக்கிய தி.மு.க. விற்கு சாதி இந்துக்களின் வாக்குகள் கிடைத்த பட்சத்தில் தலித்துகளின் வாக்குகள் அனைத்தும் மாற்று அணியான அ.தி.மு.க கூட்டணிக்கே கிடைத்துள்ளன.

தலித் மக்கள் தி.மு.க கூட்டணியிலிருந்த தலித் கட்சிகளையோ தலித் தலைவர்களையோ ஏற்றுக்கொள்ளவு மில்லை, அங்கீகரிக்கவுமில்லை என்பதையே தேர்தல் முடிவுகள் காட்டுகின்றன. காரணம் தலித்துகள் தாமிர பரணியையும், மேலவளவையும் இவ்வளவு சீக்கிரத்தில் மறக்கக்கூடியவர்களா?

பதவி ஏற்ற அ.தி.மு.க அரசு முந்தைய அரசின் திட்டத்தை முடக்குவதும், எதிர் கட்சியினரை சிறையில் தள்ளுவதையும் செய்யத் துவங்கிவிட்டது. இதிலும் தலித் இனத்தைச் சார்ந்த பரிதிஇளம்வழுதிதான் முதல் பலி. தலித்துகள் எந்த உயர் பதவியிலிருந்தாலும் எவ்வளவு பெரிய ஆளாக இருந்தாலும் சாதியின் நிமித்தம் ஒடுக்கப்படுகின்றனர் எங்கிருந்தாலும் ஒழிக்கப்படுகின்றனர்..

*– செ. சம்மந்தமூர்த்தி*

# தலித்துகளுக்கு சைக்கிளா? சுடுகாட்டுப்பாதையா?

சுடுகாட்டிற்குக்கூட பாதையில்லாத கிராமங்கள் இன்று தமிழகத்தில் ஏராளம். அதிலும் குறிப்பாக தலித்துகளுக்கு மட்டுமே இந்நிலமை! இந்த வரிசையில் பண்ருட்டிக்கருகில் உள்ள ஆ. நத்தம் என்ற தாழ்த்தப்பட்ட கிராமமும் அடக்கம்.



பூபாலன்

இக்கிராமத்தில் படையாச்சி சுடுகாட்டிற்கு மட்டும் பாதை உண்டு. ஆனால் அதே கிராமத்தில் வாழும் தலித்துகளுக்குச் சுடுகாட்டுக்குப் பாதை வசதி கிடையாது.

சுடுகாட்டுப்பாதைக்காக இங்குள்ள தலித் மக்கள் பல போராட்டங்களை நடத்தினர். அதிகாரிகளுக்கெல்லாம் தெரிவித்தனர். ஒரு பலனும் கிடைத்தபாடில்லை. எனவே அந்தக் கிராமத்தில் ஒட்டுமொத்த தலித் மக்களும் அகில உலக டாக்டர் அம்பேத்கர் நூற்றாண்டு இயக்க தலைமையில் நடந்து முடிந்த சட்ட மன்ற தேர்தலைப் புறக்கணித்தனர். எந்த அரசியல் வாதிகளையும் ஊருக்குள் நுழைய விடாமல் தடுத்தனர். தேர்தல் விளம்பரம்கூட எழுதவிடாமல் தடுக்கப்பட்டது. பண்ருட்டி தொகுதியே ஆ.நத்தம் கிராமத்தைத் திரும்பிப்பார்த்தது.

தேர்தலும் முடிந்துவிட்டது. ஆட்சியும் மாறிவிட்டது. காட்சி மாற்றத்திற்காக மக்கள் காத்து நிற்கின்றனர். எங்களின் தொடர் போராட்டம் நிச்சயம் வெற்றி பெறும், சுடுகாட்டுப் பாதையை அடைந்தே தீருவோம் என கூறுகின்றனர்.



"ஆ.நத்தம் கிராம தலித் மக்களுக்கு சுடுகாட்டுப் பாதை கிடைக்க இனியும் தாமதம் ஏற்படுமேயானால், பண்ருட்டி தொகுதியின் நிர்வாகமே ஸ்தம்பிக்கும் அளவிற்கு போராட்டம் நடத்த வேண்டியிருக்கும்" என எச்சரிக்கின்றகுர். அகில உலக டாக்டர் அம்பேத்கர் நூற்றாண்டு இயக்க பண்ருட்டி ஒன்றிய தலைவர் பூபாலன்.

–பதவி



படிப்பகம்

www.padippakam.com



# மரணத்தைத் பிறப்பிக்கும்

தமிழகத்தில் காசநோய் சிகிச்சைக்காக இயங்கிக் கொண்டிருக்கும் பெரிய மருத்துவமனைகளில் ஒன்று தாம்பரம் சானடோரியம் காச அரசு நோய் மருத்துவமனை. காசநோய் சிகிச்சைக்கு அதிக அளவில் செலவு ஏற்படுவதால் பொருளாதார வசதியற்றவர்களும், ஏழைகளும், குறிப்பாகத் தாழ்த்தப்பட்ட மக்களும் இங்குச் சிகிச்சைக்காகப் பெருமளவில் வருவது வழக்கம்.

இந்த மருத்துவமனையில் 30 க்கும் மேற்பட்ட மருத்துவர்களும், நூற்றுக்கும் மேற்பட்ட செவிலியர்களும், நூற்றுக்கும் அதிகமானோர் மற்ற பிரிவுகளில் பணிபுரிந்து வருகின்றனர். இந்த மருத்துவமனையில் ஆரம்ப காலத்தில் துப்புரவு பணி செய்யவதற்கு யாரும் முன்வராமலிருந்தனர். சிகிச்சைக்கு வரும் நோயாளிகளின் சளி, மலம் போன்றவைகளின் மூலம் நோய் பரவும் என்பதற்காகவே துப்புரவு பணிக்கு யாரும் வராமலிருக்க காரணமாகும்.

இந்நிலையில் ஆதி ஆந்திரர்கள் எனப்படும் தாழ்த்தப்பட்ட மக்கள் சுமார் 60 ஆண்டுகளுக்கு முன்னர் துப்புரவு பணியில் அமர்த்தப் பட்டனர். மருத்துவமனையைச் சுத்தம் செய்வது, நோயாளிகளின் சளி மற்றும் மலத்தை அள்ளிப்போடுவது, இறந்தவர்களின் உடல்களை அப்புறப்படுத்துவது போன்ற இழிநிலையாகக் கருதப்பட்ட பணிகளை ஆதி ஆந்திர மக்கள் செய்து வருகின்றனர்.

சுமார் 400 ஏக்கர் நிலம் இந்த மருத்துவ மனைக்குச் சொந்தமானது. இதில் ஒரு சில ஏக்கர் நிலத்தில் மட்டுமே மருத்துவமனை கட்டப்பட்டிருக் கின்றது. மற்ற நிலங்கள் அனைத்தும் காலியாகவே இருந்துவந்தன. மருத்துவமனையில் பணிபுரிபவர்களின் தகுதிக்கேற்றபடி குடியிருப்புகள் கட்டித்தரப்பட்டன. துப்புரவு பணி செய்யும் ஆதி ஆந்திர மக்களுக்குத் தாம்பரம் பச்சமலைக்கு அருகில் சுமார் 8 ஏக்கர் நிலம் ஒதுக்கப்பட்டு அம்மக்கள் குடியிருப்பு அமைத்துககொள்ள அனுமதி வழங்கப்பட்டது.

160 குடும்பங்களுக்கு மேல் துப்புரவு பணியாளர்கள் வாழ்ந்து வந்த இடத்திற்கு பச்சமலை தெலுகு லைன் என பெயரிட்டு அழைக்கப்பட்டது.

இந்நிலையில் MEPS ( மெட்ராஸ் எக்ஸ்போர்ட் புராசசிங்) என்ற தொழில் நிறுவனம் ஆரம்பிக்கப் போவதாகக் கூறி தாழ்த்தப்பட்ட மக்கள் குடியிருந்த வீடுகள் அனைத்தும் காலி செய்யப்பட்டு அங்கிருந்து அப்புறப் படுத்தப்பட்டனர். இவர்களுக்கு மாற்று ஏற்பாடாக 1984 –ம் ஆண்டு மருத்துவமனை சூப்பிரண்டெண்டாக இருந்த டாக்டர் ஜெகநாதன் என்பவர் மருத்துவமனைக்காக அமிர்தம்மாள் என்பவர் தானமாகக் கொடுத்த 22 ஏக்கர்



தலித் மக்கள் குடியிருக்கும் பகுதி






படிப்பகம்

www.padippakam.com



# ஓர் மருத்துவமனை



நிலத்தில் ஒதுக்குபுறமாக ஒரு ஏக்கருக்கும் குறைவான நிலத்தை ஒதுக்கினார். சிட்லபாக்கம் பஞ்சாயத்திற்குட்பட்ட இந்த இடம் அமிர்த நகர் காலனி என்றழைக்கப் பட்டது.

160 குடும்பங்கள் வாழ்வதற்கு போதுமானதாக இல்லாத இடத்தில் மேலும் நிலங்களை ஒதுக்க வேண்டும் என துப்புரவு பணியாளர்கள் கோரிக்கை வைத்தனர். கோரிக்கைகளைப் பரிசீலிக்கின்றோம் என கூறி வந்த மருத்துவமனை நிர்வாகம் திடீரென இருக்கின்ற இடத்தையும் காலி செய்யும்படி கட்டளையிட்டது. அதிர்ச்சியடைந்த மக்கள் "எங்களுக்கு இதைவிட்டால் வேறு வழியில்லை. நாங்கள் வேறு எங்கேயும் போக முடியாது. டி.பி. ஆஸ்பத்திரியில் வேலை செய்வதால் எங்களுக்கு வாடகை வீடுகூட கொடுக்குறதில்ல. எங்கள இங்கேயே விட்டுடுங்க. இல்லாட்டி வேறு ஏதாவது ஒரு இடத்தை நீங்களே ஒதுக்கி கொடுங்க" என மன்றாடினர். மருத்துவமனை நிர்வாகமோ இவர்களுடைய மன்றாட்டை ஏற்பதாக இல்லை மாறாக இம்மக்களை அங்கிருந்து துரத்தியடிப்பதிலேயே குறியாக இருந்தனர்.

மின்சாரம் துண்டிக்கப்பட்டது. தண்ணீரும் தடுக்கப்பட்டது. பட்டாவும் கொடுக்கப்படவில்லை. மருத்துவமனை நிர்வாகம் தாழ்த்தப்பட்ட மக்களுக்குப் பல விதங்களில் தொல்லை கொடுக்க ஆரம்பித்தது. நோட்டீஸ் மேல் நோட்டீஸ் விடப்பட்டது. வலுக்கட்டாயமாக வெளியேற்றுவதற்கான முயற்சியையும் செய்து பார்த்தது. குண்டர்களையும், ரவுடிகளையும் கொண்டு மிரட்டினர்.

இதற்கிடையில் 1995 ம் ஆண்டு ஜெயலலிதா முதலமைச்சராக இருந்த நேரத்தில் இந்தத் துப்புரவு பணியாளர்களுக்கு மாற்று இடம் அமைத்துக்கொடுக்க ஆணை பிறப்பிக்கப்பட்டது. இது சம்மந்தமாக ஆர்.ஐ மற்றும் சர்வேயர் அப்பொழுது மருத்துவமனை சூப்பிரடெண்டாக இருந்த தெய்வநாயகத்திடம் அணுகிய போது மிகக்கேவலமாகப் பேசி "அவனுங்களுக்கு எங்க இடம் ஒதுக்குனும்னு எங்களுக்குத் தெரியும் நீங்க வெளியில் போங்க" என காட்டுக்கூச்சல் போட்டு வெளியேற்றினார். பிறகு ஆட்சி மாறியதும் மாற்று இடத்திற்கான ஏற்பாடுகள் கைவிடப் பட்டன. மருத்துவமனையில் பதவி வகித்த பல மருத்துவர்களும் துறை அதிகாரிகளும் தாழ்த்தப்பட்ட மக்களுக்குத் தொல்லை கொடுப்பதிலேயே குறியாக இருந்தார்கள். இதில் சுமார் 2 ஆண்டுகளாக அதே மருத்துவமனையில் பணியாற்றிக் கொண்டிருக்கும் டாக்டர் கெய்சர் அகமது என்பவரும் டாக்டர் ராஜசேகர் என்பவரும் முக்கியமானவர்கள்.

ஏறக்குறைய 400 ஏக்கர் நிலப்பரப்பிற்குச் சொந்தமான இந்த மருத்துவமனை நிர்வாகம் பல ஏக்கர்

தாரை வார்க்கப்பட்ட மருத்துவமனை நிலங்கள்





படிப்பகம்

www.padippakam.com

நோய் மிகவும் முற்றியிருந்தால் ஒரு சிலர் மட்டுமே உள் நோயாளியாக இம்மருத்துவமனையில் அனுமதிக்கப்படுவர். அதிலும் பிரபலங்களின் சிபாரிசு பெற்றிருக்க வேண்டும் அல்லது ஒரு கணிசமான தொகை நிர்வாகிகளுக்குக் கப்பம் கட்டியாகவேண்டும். இதில் எதையும் செய்யமுடியாத ஏழை மக்களின் கதி அதோ கதிதான். உள் நோயாளிகளாக அனுமதிக்கப்படாத பல நோயளிகள் தங்கள் ஊருக்குத் திரும்பிச் சென்று மீண்டும் சிகிச்சைக்கு வர இயலாதவர்களாகிவிடுகின்றார்கள் எனவே வேறு வழியின்றி வானமே கூரையாகவும், மருத்துவமனை வளாகமே தரை விரிப்பாகவும் கொண்டு சிகிச்சைப் பெற்று வருகின்றனர். இதனால் வெயிலுக்கும் மழைக்கும் இரையாகி மருத்துவ மனை வளாகத்துக்குள்ளேயே உயிரைவிடுகின்ற கொடுமையான அவலம் அடிக்கடி இங்கே நிகழுகின்றன. இறந்தவர்களின் முகவரி இல்லாததால் அநாதைப் பிணமாக்கப்படும் கோரக்காட்சிகள் நெஞ்சை நெகிழவைக்கின்றன. பல நேரங்களில் இதுபோன்று இறந்தவர்களின் சடலங்களை ஜி.எஸ்.டி சாலையில் தூக்கிப் போடுகிறார்கள் இரக்கமே இல்லாத இந்த நெஞ்சக மருத்துவ மனை நிர்வாகிகள். கடந்த மூன்று மாதங்களில் மட்டும் ஐந்துக்கும் மேற்பட்ட நோயாளிகள் மருத்துவமனை வளாகத்திலேயே இறந்துகிடந்தனர். மருத்துவமனையில் அனாதைப்பிணங்களாகக் கருதப்படும் உடல்கள் குறித்து பின்னர் மருத்துவமனை அதிகாரிகள் போலீஸ் ஸ்டேஷனுக்கு தகவல் அளிக்கின்றனர். இறந்து போனவர் யார் என்பது குறித்த தகவல் ஏதும் மருத்துவமனையில் இல்லாததால் போலிசார் அனாதைப்பிணங்களைப் பிரேதப் பரிசோதனை செய்து மறைத்து விடுகின்றனர். மருத்துவமனையின் அலட்சியத்தால்தான் இதுபோன்ற மரணங்கள் தொடர்கின்றன என நோயாளிகள் தெரிவிக்கின்றனர். மக்களின் நன்மைக்காக, குறிப்பாக ஏழை, எளியோர்களின் நலனுக்காக உள்ள இது போன்ற மருத்துவமனைகளின் செயல்பாடுகள் தற்போது திருப்திகரமாக இல்லை.



நிலங்களை தொழில் மையங்கள் அமைப்பதற்கும் மின்சாரத்துறைக்கும் பேருந்து நிலையத்திற்கும் வீட்டு வசதி வாரிய குடியிருப்புகள் அமைக்கவும் தாரைவார்த்துக் கொடுத்துள்ளது. தேசிய நெடுஞ்சாலையில் அமைந்துள்ள ஆஞ்சநேயர் கோயில் நெடுஞ்சாலைத் துறையினரால் அகற்றப்பட்டபோது இந்த மருத்துவமனை நிர்வாகம் தானாக முன்வந்து மருத்துவ மனைக்கு சொந்தமான 4 ஏக்கர் நிலத்தை ஆஞ்சநேயர் கோவிலுக்காக அள்ளிக் கொடுத்தது.

இப்படி ஒன்றுக்கும் உதவாக்கரைக்கெல்லாம் நிலங்களை வாரி கொடுத்துக்கொண்டிருக்கும் மருத்துவமனை நிர்வாகம் ஒரு ஏக்கருக்கு குறைவான இடத்தில் வசித்துக்கொண்டிருக்கும் அந்த மருத்துவ மனையில் பணிபுரியும் தலித் மக்களை விரட்டியடிப்பது வேடிக்கை யாகவும் புதிராகவும் இருக்கிறது.

—சிந்தை ஆர்


**களம் வாசகர்களே!**


சந்தாதாரர்களாகிவிட்டீர்களா?
ஆண்டுசந்தா ரூ. 60 மட்டுமே
பழைய சந்தாதாரர்கள் தங்கள் சந்தாவை புதுப்பித்துக்கொள்ளவும்

வாசகர்களிடமிருந்து விமர்சனங்கள் வரவேற்கப்படுகின்றன.
விமர்சனங்கள் வெளியிடப்படும்




படிப்பகம்

www.padippakam.com



கொள்கையளவில் அல்ல
ஓட்டுக்காக மட்டுமே ஓட்டிக்கொண்டவர்கள்
இனி
பழைய குருடி கதவைதிறடி பாணியில்
மக்களை மறந்துவிட்டு
எலியும்பூனையுமாகச்சட்டசபையில்
அடித்துக்கொள்வார்கள்
விளக்கம் கேட்டால்
அரசியலில்
நிரந்தர நண்பர்களுமில்லை
நிரந்தர எதிரிகளுமில்லை என்று
இஷ்டம்போல் கூறிக்கொண்டு
அரசியல் விபச்சாரம் செய்வார்கள்!
நிரந்தர ஏமாளிகளாக நாம்மட்டும்
இயலாமை உலகில் திண்டாடுவோம்!


நமக்குநாமேதான்
இனிமேல் எல்லாமே
கடைக்குப்போனால்
கதிகலக்கும் விலைவாசி உயர்வுதான்
[காட்டு] வேலைக்குப்போனால்
குறைந்தக் கூலிதான்
படித்துப்பட்டம் வாங்கினாலும்
வேலையில்லாத்திண்டாட்டம்தான்
குடிநீருக்கும்
ரேஷன் கடையிலும்
கொளுத்தும் வெயிலில்
காத்திருக்கவேண்டியதுதான்!
உரிமைகளுக்காகப் போராடினால்
அதேபோலிஸ் வேட்டைதான்
அரசாங்கத்திடம் ஆகவேண்டிய காரியம்
இருந்தால்
அதே லஞ்சம்தான்

ஆட்சிகள் மாறுகின்றன
அரசியல் தலைவர்கள் மாறுகின்றனர்
கூட்டணிகள் மாறுகின்றன
திட்டங்கள் மாறுகின்றன
தலித்துகளின் தரம் மட்டும் மாறாமல்
சாதி முள்ளில்
நிரந்தர வரலாறாக ஊசலாடுகிறது.



படிப்பகம்

June -2001-Makkal Kalam Regd. No.TN/PR CHIEF PMG 773/
www.padippakam.com




Published by Gopinathan 67, Canal Street, Chennai - 600 021. Printed by : M.Navaneethan at Navajyothi Achagam, Chennai-600 002.
படிப்பகம்